# பாட்டாளி சிந்தனை

Volume 27 No. 1

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்)

**S U C I (Communist)**

September 2016

தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ்

விலை ரூ 3


## வரைவு தேசிய கல்விக்கொள்கை 2016 சில உள்ளீடுகள்

# ஏமாற்றுத்தனமான–அபாயகரமான அம்சங்கள்

*ஆட்சிக்கு வந்தால் ஒரு புதிய கல்விக் கொள்கையை வகுப்போம் என்பதும் 2016 பொதுத்தேர்தல் பிரச்சாரத்தில் பாஜக வழங்கிய தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றாகும். பாஜகவின் சித்தாந்த ஆலோசனை வழங்கும் அமைப்பாகத் திகழும் ஆர்எஸ்எஸ்ஸின் முன்னுரிமை திட்டமாக இக்கொள்கை இருப்பதனால் அதன் அரசியல் பிரிவான பாஜக அதை எவ்வளவு முக்கியமாகக் கருதும் என்பதை உணரலாம். மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் வரைவு தேசியக் கல்விக் கொள்கை 2016க்கான சில உள்ளீடுகள்* (Some Inputs for Draft National Education Policy 2016) *என்ற தலைப்பிட்ட ஆவணத்தை சமீபத்தில் வெளியிட்டுள்ளது.*

*இதற்கு முன்பு பல்வேறு தருணங்களிலும் நாட்டின் முக்கியமான கல்விப் பிரச்சினைகள் மற்றும் கல்வி மீதான தாக்குதல்கள் குறித்து எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் ஆங்கில ஏடான புரொலிட்டேரியன் எராவில் (1 டிசம்பர் 2014, 1 ஜனவரி 2015, 15 ஏப்ரல் 2015, 15 ஜனவரி 2016 ஆகிய பதிப்புகளில்) நமது கருத்துக்களை எடுத்துரைத்துள்ளோம். தற்போதைய இந்த ஆவணத்தின் மீதும் நமது கருத்துக்களை வழங்கும் வாய்ப்பை பயன் படுத்திக் கொள்ள விரும்புகிறோம். ஆனால் இந்த ஆவணத்தை விரிவாகப் பார்ப்பதற்கு முன்பாக நாட்டின் கல்வி அமைப்பு குறித்த கடந்த கால பின்னணியைப் பற்றிப் பேசுவது பொருத்தமாக இருக்கும்.*

### நவீன இந்தியாவில் எதிர்பார்க்கப்பட்ட கல்வி

*நவீன இந்திய தேசம் உருவானபோது, சுதந்திரத்திற்காக போராடிய நாட்டின் மாபெரும் கல்வியாளர்களும் மாமனிதர்களும் இறையாண்மையுள்ள சுதந்திர நாட்டிற்கு ஏற்ற எதிர்கால சந்ததியை உருவாக்கக்கூடிய கல்வி அமைப்பை சிந்தையில் கொண்டிருந்தனர். அதற்கு அடிப்படையாக, அதற்கு முன் எப்போதும் இல்லாத, அனைவருக்கும் இலவசமான முழுமையான கல்வியை கனவு கண்டனர். முறையான கல்வி அமைப்பின் அனைத்து கட்டங்களிலும், ஆரம்பம் முதல் உயர்மட்டம் வரையிலும் அனைவருக்கும் இலவசமான கல்வி வழங்கும் முழுப் பொறுப்பை அரசாங்கமே ஏற்கவேண்டும் என்றும் அவர்கள் தெளிவாகக் கூறினர். அதற்காக பட்ஜெட்டில் போதிய நிதி ஒதுக்கீடுகள் உள்ளிட்ட அனைத்து ஆதாரங்களையும் அரசாங்கம் கட்டாயம் வழங்கவேண்டும் என்றனர். ஆனாலும் கூட அந்தக் கல்வியின் குணாம்சம் எப்படி இருக்க வேண்டும் என்பதை கூறுவது அரசாங்கத்தின் வேலை அல்ல என்றும் உறுதிபடக் கூறினர். அதை கல்வியாளர்கள், பேராசிரியர்கள் ஆசிரியர்கள், அறிஞர்கள் மற்றும் கல்வியை நேசிப்பவர்களே தீர்மானிக்க வேண்டும்.*

*அதன்படி, கடந்த காலத்திய மிக உயர்ந்த அறிஞர்கள் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்து தங்களின் வாழ்க்கைப் போராட்டத்தின் மூலம் அவர்களது கருத்துக்களையும் சிந்தனைகளையும் தெளிவான வார்த்தைகளில் கூறி ஓர் அடித்தள மிட்டனர். ராம் மோகன் ராய், ஈஸ்வர சந்திர வித்யாசாகர், விவேகானந்தா, ரவீந்திரநாத் தாகூர், மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி, லாலா லஜபதி ராய், கோபால கிருஷ்ண கோகலே, ஜோதிராவ் பூலே போன்ற மாபெரும் அறிஞர் பெருமக்கள், பண்டைய இந்தியாவின் புகழ்மிக்க அறிஞர் பாரம்பரியத்தை மதித்து போற்றியதோடு கல்வி என்பது 'வாழ்க்கையைக் கட்டியமைக்கும், மனிதனை மனிதனாக்கும், நற்குணங்களை உருவாக்கும்' பாத்திரத்தை ஆற்ற வேண்டும் என்று கூறினர். உருவெடுக்கும் தேசம் தேச எல்லை வரம்புகளற்ற மதச்சார்பற்ற, விஞ்ஞான பூர்வ ஜனநாயகபூர்வ நவீன கல்வியைக் கொண்டிருக்க வேண்டும் என்று அவர்கள் கருதினர். அது தான் ஒரு தேசத்தை அனைத்து வலிமை, உத்வேகம் மற்றும் குணாம்சத்தோடு வளர்வதற்கு உதவி செய்து இன்றைய உலகில் தலைநிமிர்ந்து நிற்க வகை செய்யும்.*

*சுதந்திரத்திற்குப் பிறகு ஏராளமான ஆரவாரத் தோடும் பெருமிதத்தோடும் கொண்டுவரப்பட்ட கல்விச் சீர்திருத்தங்கள் அனைத்தும் கல்வி அமைப்பை குறித்த நவீன இந்தியாவை குறித்த அந்த சிற்பிகளின் கனவுகள் எல்லாம் நிறைவேற்றப் படாததோடு மட்டுமல்லாது கல்வியை மேம்படுத்து கிறோம் என்ற ஒவ்வொரு முயற்சியிலும் அவர்களது கனவுகள் சிதறடிக்கப்படுவது ஆழ்ந்த கவலையும் வேதனையுமளிக்கிறது. தற்போதைய பாஜக அரசாங்கம், தனது அரசியல் ஆலோசகரான ஆர்எஸ்எஸ்ஸின் நேரடியான மற்றும் மறைமுக மான அனுமதியோடும் ஒப்புதலோடும் கொண்டு வரும் வரைவு தேசியக் கல்விக் கொள்கை 2016 (இனி இது என்இபி 2016 என்று குறிப்பிடப்படும்) நாட்டின் விரும்பப்பட்ட கல்வி வளர்ச்சியை சிதறடிக்கும் சீரழிக்கும் அந்த பட்டியலை நீட்டிக்க செய்கிறது.*

### என்இபி 2016 – வடிவமைக்கும் செயல்முறைப்போக்கு

*என்இபி 2016–ஐ கொண்டுவருவதற்காக மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் 21 மார்ச் 2015இல் ஓர் ஆவணத்தை வெளியிட்டது. கல்விக் கொள்கையை வகுக்கும் பணி புகழ்பெற்ற, நேர்மையான, பகுத்தறிவான, ஜனநாயக எண்ணம் கொண்ட கல்வியாளர்கள் மற்றும் வாழ்க்கையின் இதரப் பிரிவுகளில் உள்ள மற்ற புலமைவாய்ந்த மனிதர்களையும் உள்ளடக்கிய பொதுக் கமிட்டியின் வசம்தான் இருக்கவேண்டும் என்று நாட்டின் கல்வியை நேசிக்கும் ஒவ்வொருவரும் விரும்புவர். நாம் முன்னர் கூறியபடி, இது அரசாங்கத்தின் பணியல்ல, அதன் அமைச்சர்கள் அல்லது அதன் ஆதரவாளர்கள் அல்லது அதன் கைக்கூலி அமைப்புகள்–தனிநபர்கள்–அதிகாரிகளின் பணியல்ல. ஆனால் இங்கு பின்பற்றப்பட்ட செயல்முறைப் போக்கோ இந்த விரும்பத்தகுந்த பாதையைவிட்டு வெகுதூரம் விலகிச் சென்றுவிட்டது.*

தொடர்ச்சி 2ம் பக்கம்

## தோழர் மா சே துங் அவர்களுக்கு செவ்வணக்கம்



*26 செப்டம்பர் 1893 – 9 செப்டம்பர் 1976*

மாபெரும் வெற்றியினை நாம் வென்றிருக் கிறோம். ஆனால் தோல்வியுற்ற வர்க்கம் தொடர்ந்து போராடிக்கொண்டேயிருக்கும். அதன் உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். அந்த வர்க்கமும் இருக்கத்தான் செய்கிறது. எனவே, நாம் இறுதி வெற்றி அடைந்துவிட்டதாகக் கூறிவிட முடியாது. பல பத்தாண்டுகள் சென்ற பிறகும்கூட முடியாது. (அந்த வர்க்கத்தின் மீது) நமது கண்காணிப்பை நாம் நழுவவிடக்கூடாது. லெனினிச கருத்தின்படி, ஒரு சோசலிச நாட்டின் இறுதி வெற்றி அந்நாட்டின் பாட்டாளி வர்க்கம் மற்றும் பரந்துபட்ட மக்களின் முயற்சியை மட்டுமின்றி, உலகப் புரட்சியின் வெற்றியையும் மனிதயினம் முழுமையும் விடுதலையடையும் வகையில் இப்பூவுலகில் மனிதனை மனிதன் சுரண்டும் அமைப்பை அழித்தொழிப்பதையும் சார்ந்திருக்கின்றது. ஆக, நமது நாட்டில் புரட்சியின் இறுதி வெற்றியைப் பற்றி மேலோட்டமாகப் பேசுவது தவறாகும். இது லெனினிசத்திற்கு எதிராகச் செல்கின்றது. உண்மை விவரங் களுடனும் ஒத்துப்போகவில்லை.

*(கலாச்சாரப் புரட்சி தொடர்பாக வழிகாட்டுதல்கள் என்ற நூலில் உள்ள மேற்கோள், 15–04–1969)*

**2வது அகில இந்திய விவசாயிகள் விவசாயத் தொழிலாளர்கள் மாநாட்டை வெற்றிபெறச் செய்வோம்!**

27–28 அக்டோபர் 2016
புவனேஷ்வர், ஒடிசா

துவக்கவுரை: தோழர் அசித் பட்டாச்சாரியா
பொலிட்பீரோ உறுப்பினர், எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)

சிறப்புரை: தோழர் **பிரவாஸ் கோஷ்**
பொதுச் செயலாளர், எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)

**AIKKMS**
அகில இந்திய விவசாயிகள் விவசாயத் தொழிலாளர்கள் சங்கம்

# மனிதனை உருவாக்குவதல்ல, வேலைக்குத் தயார் செய்வதும் தொழில்திறன் வளர்ப்பதுமே என்இபி 2016 நோக்கம்

1ம் பக்கத் தொடர்ச்சி

அந்நேரத்தில் "சில லட்சக்கணக்கான, ஆயிரக் கணக்கான நூற்றுக்கணக்கான கூட்டங்கள் பல்வேறு மட்டங்களில் நடத்தப்படும்" என்று மனிதவள மேம் பாட்டு அமைச்சகம் கூறியது கேள்விக்குள்ளா கியது. வெவ்வேறு மட்டங்களில் உள்ள மக்கள் பார்ப்பது அல்லது பங்கேற்பது இருக்கட்டும், இதுபோன்ற கூட்டங்கள் நடைபெறுவது எத்தனை பேருக்குத் தெரியும்? அக்கூட்டங்களில் வெளிவந்த முடிவுகள் என்ன? என்ற கேள்விகள் எழுப்பப் பட்டன. அக்கேள்விகளுக்கெல்லாம் பதில் தரப்படாத தோடு ஆர்எஸ்எஸ்-ஐ சார்ந்த தனிநபர்களும் அமைப்புகளும் இந்திய கல்விமுறை "முழுமையாக சீரமைக்கப்பட வேண்டும்" என்று கோரியும் "நாட்டின் கல்வியில் இந்து சிந்தனைகள் உள்வாங்கப்பட்டால் மட்டுமே துல்லியமான வழியை வழங்கிட முடியும் மற்றும் குழப்பத்தை ஓர் முடிவுக்கு கொண்டுவர முடியும்" என்றும் அழுத்தம் தந்தனர். தங்களது கருத்துக்களை அப்போதைய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்திடம் அளித்துவிட்டதாகவும் அது பரிசீலிக்கப் பட்டு சேர்க்கப்பட்டுவிட்டதாகவும் கூட அவர்கள் கூறினர்.

அடுத்த கட்டமாக, 5 உறுப்பினர்களடங்கிய "புதிய கல்விக் கொள்கையை வகுத்தெடுக்கும் கமிட்டி" என ஒன்று நியமிக்கப்பட்டது. பின்னர் பிரதானமாக அதிகாரிகளையே உள்ளடக்கிய டிஎஸ்ஆர் சுப்பிரமணியன் தலைமையிலான அக்கமிட்டியானது கடந்த 27, மே 2016 அன்று தனது பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்திடம் சமர்ப்பித்தது. மனித வள மேம்பாட்டு அமைச்சகம் அந்த அறிக்கையை 'பொதுமக்களின் பார்வைக்கு' வைத்து அந்த அமைச்சரகமே அதை மதிப்பீடு செய்திருக்க வேண்டும். ஆனால், அது அந்த அறிக்கையை பொது மக்களின் பார்வைக்கு வைக்காமல் 'வரைவு புதிய கல்விக் கொள்கைக்கான சில உள்ளீடுகள்' என்ற பெயரில் 43 பக்க ஆவணத்தை ஜூலை 2016இல் வெளியிட்டது. புதிய கல்விக் கொள்கை ஒரு புதிய மைல்கல்லாக இருக்கும் என்று அது கூறியது. அது அப்படியே இருந்துவிட்டு போகட்டும், இந்த கொள்கையை உருவாக்குவதன் பின்னணியில் உள்ள சம்பவங்கள் மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் நேர்மையான அணுகுமுறையைக் காட்டவில்லை.

### கல்வியின் நோக்கம்

இந்த ஆவணம், பாடத்திட்ட புதுப்பித்தலும் தேர்வுமுறை சீர்திருத்தங்களும் (Curriculam Renewal and Examination Reforms) என்ற தலைப்பிட்ட பிரிவு 4.5ல் விவேகானந்தரின் பின்வரும் பொன்மொழி யோடு துவங்குகிறது: "கல்வி என்பது உங்கள் மூளையில் சேர்க்கப்பட்டு வாழ்நாள் முழுவது ஜீரணமாகாமல் கலவரம் செய்யும் செய்திகளின் தொகுப்பு அல்ல. நம் வாழ்க்கையை கட்டி யெழுப்புகிற, மனிதனை உருவாக்குகின்ற, நற்குணாம் சங்களை உருவாக்குகின்ற கருத்துக்களை உட்கிர கித்துக்கொள்ள வேண்டியுள்ளது. ஐந்து கருத்துக்களை நீங்கள் உள்வாங்கி அவற்றை உங்கள் வாழ்க்கை யாகவும் குணாம்சமாகவும் ஆக்கிக்கொண்டால், ஒரு நூலகத்தையே மனப்பாடம் செய்த எந்த ஒரு மனிதனையும் விட நீங்கள் அதிகம் கற்றவராவீர்கள். கல்வியும் செய்தித்தொகுப்பும் ஒன்றேயென்றால், நூலகங்கள்தான் இவ்வுலகில் மிகப்பெரும் ஞானிகள் மற்றும் கலைக்களஞ்சியங்கள்தான் மிகப்பெரும் ரிஷிகள்" என்றாகிவிடும்.

இது வரைவு தேசிய கல்விக் கொள்கையின் பிற்சேர்க்கையாகும். ஆனாலும்கூட, இந்த ஆவணத்தின் பிற்பாதியில், பிரிவு 3இல், கல்வியின் 14 நோக்கங்கள் பட்டியலிடப்பட்டுள்ளது. அதில் ஒன்றுகூட விவேகானந்தரின் பொன்மொழியில் கூறப்பட்டுள்ள நோக்கத்தை அதாவது நமக்கு வாழ்க்கையைக் கட்டியெழுப்பக்கூடிய, மனிதனை மனிதனாக்கும், குணாம்சத்தைக் கட்டியெழுப்பும் கருத்துக்களை உள்வாங்கும் கல்வி வேண்டும் எனும் நோக்கத்தைக் கொண்டிருக்கவில்லை, அதற்கு வடிவம் கொடுப்பதுபற்றி ஆவணத்தில் எங்கும் கூறப்படவில்லை.

மாறாக கல்வியின் நோக்கமானது, வேலை செய்யும் மற்றும் தொழில் செய்யும் திறனை வளர்த்துக் கொள்வது, வாழ்க்கைக்கும் மற்றும் நாட்டின் வளர்ச்சிக்கும் பயன்படும் வேலையை உருவாக்கிக் கொள்வது என்பதாக சுருக்கப்பட்டுள்ளது. (பக் 9 சில உள்ளீடுகள் . . .) இதற்கு பின்னரும் என்இபி நாட்டின் கல்வி அமைப்பில் ஒரு மைல்கல்லாக இருக்கும் என்று மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் கூறுகிறது. ஆனால் சில கேள்விகளுக்கு ஆவணம் பதிலளிக்கவில்லை. கடுமையான தொழில் மந்தநிலை நிலவுவதால் வேலை வாய்ப்புகள் குறைந்துள்ள சூழ்நிலைமையில் திறன் அல்லது வேலைசெய்யும் தகுதி-சார்பு கல்வி (வேலை சார் கல்விக்கான புதிய வார்த்தை) வேலைவாய்ப்புகளை உருவாக்குமா? மாறாக கல்வியின் நோக்கமானது நுகர்வு கலாச் சாரத்தை தூண்டி விடுதல், வேலை தேடுதல் மற்றும் தனிநபர்வாத அணுகுமுறை மற்றும் கண்ணோட்டத் திலிருந்து விடுபட்டதாக இருப்பதை உத்திரவாதப் படுத்த வேண்டாமா? அதோடு மதச்சார்பற்ற, விஞ்ஞானபூர்வ நவீன கல்வி என்பது குறித்த ஒரு குறிப்புகூட ஆவணத்தில் எங்கும் தென்பட வில்லை. கல்வியின் அடித்தளமான விஞ்ஞானபூர்வ முறை மற்றும் அணுகுமுறை இருக்க வேண்டும் என்பதற்கான அங்கீகாரம்கூட எங்கும் இல்லை.

### கல்வி அமைப்பில் உள்ள சீர்கேடுகள்

நாட்டின் தற்போதைய கல்வி அமைப்பில் ஆயிரத்தொரு மிகவும் ஆபத்தான சீர்கேடுகள் உள்ளன என்ற பிரச்சினை குறித்து அறிவு சிறி தேனும் உடையவர்கள்கூட மறுக்கவோ புறக்கணிக் கவோ முடியாது. இந்த ஆவணத்தில், "கல்வியை அணுகுவதிலும் பங்குகொள்வதிலும் வழங்கப்பட்ட கல்வியின் தரம், கல்வியின் சமநிலை, அமைப்புத் திறன், ஆளுமை மற்றும் நிர்வாகம், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி, அதோடு கல்வி வளர்ச்சிக்கான நிதியளிக்கும் கடமை போன்றவை தொடர்பானவை களில் பல கவலைகளும் சவால்களும் இன்னமும் நீடிக்கின்றன" (பக் 7) என்று மனிதவள மேம்பாட்டு அமைச்சகமே ஒப்புக்கொண்டிருக்கிறது. ஆனால் அந்தப் பிரச்சினைகளுக்கான ஆணிவேர் காரணங் களைப் பற்றிய சரியான வரையறையோ அல்லது அதை சரியான முறையில் சரிசெய்வதற்கான நடவடிக்கைகள் குறித்தோ எங்கும் இல்லை.

தனது முந்தைய தவறுகளை உண்மையிலேயே சரிசெய்து கல்வியில் எல்லோரையும் சேர்க்க வேண்டும் என்று அரசாங்கம் ஆர்வம் காட்டி யிருந்தால் அது கல்வி பெறும் உரிமைச் சட்டம் 2009ஐ ரத்து செய்திருக்க வேண்டும், அதற்கு பதிலாக அனைத்து மட்டங்களிலும் உண்மையான கல்வி உரிமையை உத்திரவாதப்படுத்தி கல்வியை அடிப் படை உரிமையாக்கும் சட்டத்தை அறிமுகப்படுத்தி யிருக்கும், இந்த ஆவணத்தில் கூறப்பட்டிருப்பது போல "சிறுபான்மை கல்வி நிறுவனங்களை பிரதான நிறுவனங்களாக கொண்டுவரும்படி கல்வி பெறும் உரிமைச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்படும்" என்ற பூசி மெழுகும் ஆலோசனைகளைக் கூறியிருக்காது. நாட்டின் கல்வியை சரியான பாதைக்குக் கொண்டுவர மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் உண்மையிலேயே ஆர்வமாக இருந் திருந்தால், ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் அல்லாத ஊழியர்களுக்கான ஊதியங்கள் மற்றும் ஓய்வூதியப் பலன்களைச் சேர்க்காமல் கல்விக்கென மத்திய பட்ஜெட்டில் 10% நிதி ஒதுக்கியிருக்க வேண்டும், சுயநிதி கல்வி அணுகுமுறையையும் அரசாங்கத்தின் உதவியோடு அதிக பொருட்செல விலான தனிச்சலுகையான கல்வி நிறுவனங்கள் அமைப்பதையும் திரும்பப் பெற்றிருக்க வேண்டும். கல்வி நிலையங்களின் சிதிலமடைந்துவரும் கட்ட மைப்பு வசதிகளை மேம்படுத்த உத்திரவாதப் படுத்தியிருக்க வேண்டும். மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் ஜனநாயகத்தையும் அரசியலமைப்புச் சட்டத்தையும் மதிப்பது உண்மையாக இருக்குமானால் கல்வியை மத்திய மற்றும் மாநில அரசுகளின் பொதுப்பட்டியலில் இருப்பதை உத்திரவாதப் படுத்தி கல்விப் பிரச்சினைகளில் மாநிலங்களின் உரிமைகளைக் காப்பாற்றியிருக்க வேண்டும்.

### சீர்கேடுகளின் உதாரணங்கள் : பள்ளி இடைநிற்றல்கள்

சீர்கேடுகளில் சில முக்கியமானவைகளை மட்டும் சற்று சுருக்கமாகப் பார்ப்போம். உதாரணத்திற்கு, பள்ளி இடைநிற்றலை (Dropouts) பொறுத்தமட்டில், "2014-2015 இல் ஆரம்பக் கல்வியில் தக்கவைக்கும் வீதம் 83.7% ஆகவும் தொடக்கக் கல்வியில் 67.4% ஆகவும் உள்ளது. அதாவது 1ஆம் வகுப்பில் சேரும் 10 குழந்தைகளில் 4 பேர் 8 ஆம் வகுப்பை முடிப்பதற்கு முன்பாகவே பள்ளியை விட்டு நின்று விடுகின்றனர் என்பதை இது காட்டுகிறது" (பக் 12) என்று இந்த ஆவணம் ஒப்புக்கொள்கிறது. இதில் உண்மைகளுக்கு முரணான தகவல்களும் சொல்லப் பட்டுள்ளன. இது குறிப்பிடத்தக்க அளவு குறைந் துள்ளது என்று கூறப்பட்டுள்ளது; ஆனால் இது கவலையளிப்பதாக உள்ளது என்றும் கூறப்பட் டுள்ளது. அதற்கு என்ன காரணம் என்றோ அதற்கான தீர்வோ பரிந்துரைக்கப்படவில்லை. சமூக மற்றும் பொருளாதாரரீதியாக பின்தங்கிய சமூகங்களிலிருந்து வரும் குழந்தைகளை பள்ளிகளில் தக்கவைப்பதை மேம்படுத்துவதற்கு உரிய நடவடிக் கைகள் மேற்கொள்ளவேண்டிய அவசியம் இருப்பதை இடைநிற்றல் பிரச்சினை கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளது என்று கூறுகிறது (பக் 11). ஆனால் என்ன நடவடிக்கைகள் என்று ஒரு குறிப்பும் இல்லை.

"பொருளாதார ரீதியாக பின்தங்கியுள்ள பிரிவி லிருந்து வரும் குழந்தைகளுக்கு பள்ளிக்கு முந்தைய கல்வியில் பங்கேற்கும் வாய்ப்பு குறைவாக உள்ளது" என்று அது கூறுகிறது. ஆனால் ஏன்? அது கடுமை யான தனியார்மயம், மற்றும் வியாபாரமயத்தால், அதிலும் அரசாங்கமே வியாபாரமயத்தில் ஈடுபடு வதால் ஒவ்வொரு நாளும் கல்வியின் விலை அதிகரிப்பதால் இல்லையா? வறுமை குறித்து என்ன தான் இட்டுக்கட்டிய தகவல்களை அரசாங்கம் வெளி யிட்டாலும் நாட்டின் பெருவாரியான மக்கள் வறுமையில் இருப்பது இதற்குக் காரணமில்லையா? இந்த காரணங்கள் எல்லாம் கால்மிதியில் போட்டு மறைக்கப்பட்டு விட்டது. குழந்தைகளுக்கு பள்ளிக்கு-முந்தைய கல்வி குறித்து இன்று நீலிக்கண்ணீர் வடிக்கும் இதே அரசாங்கம்தான் இந்த பிரிவு மக்களுக்கான ஒருங்கிணைந்த குழந்தை வளர்ப்பு சேவை நிதியை ஈவிரக்கமின்றி குறைத்துள்ளது என்ற உண்மையையும் இந்த ஆவணம் கால்மிதியில் போட்டு மறைத்துவிட்டது. எனவே பள்ளி இடை நிற்றல் குறித்த அவர்களது கவலையானது வெறும் ஏமாற்று வேலையே.

### கல்வியின் தரம்

"மாணவர்களின் கற்றலில் திருப்தியில்லாத நிலை இருப்பது பள்ளிக் கல்வி சந்திக்கும் மிகப்பெரிய சவாலாகும்" என்று இந்த ஆவணத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. தரம் குறைந்துவரும் அப்பட்டமான உண்மையை மூடிமறைப்பதற்காக சில நோக்கமற்ற வெற்று வார்த்தைகள் கூறப்பட்டுள்ளன. ஆனால் சில உண்மையான பிரச்சினைகள் தொடப்பட வில்லை. ஒவ்வொரு கிராமத்திலும் பள்ளிகளுக்கான யதார்த்தத் தேவை மற்றும் ஆசிரியர்கள் பற்றாக்குறை இருப்பதைப் பற்றி அது என்ன கூறுகின்றது? அரசாங்க நிதி உதவியில் இயங்கும் பள்ளிகளில் காலியாக இருக்கும் ஆசிரியர் மற்றும் ஆசிரிய ரல்லாத ஊழியர்களை நிரந்தர அடிப்படையில் போதிய எண்ணிக்கையில் நிரப்புவது என்ன வாயிற்று? அனைத்து பகுதிநேர, உதவி ஆசிரியர்கள் மற்றும் கௌரவ ஆசிரியர்களை ஏன் நிரந்தர ஆசிரியர்களாக எடுத்துக்கொள்ளக்கூடாது? மாணவர்களையும் அவர்களது குடும்பங்களையும் பிடித்து இழுக்கும் கடுமையான வறுமைக்கு என்ன செய்வது? கல்வித் துறை அதிகாரிகள், அமைச்சர்கள் மற்றும் உயர் மட்டத்திலிருப்பவர்கள் பரந்துபட்ட

தொடர்ச்சி 3ம் பக்கம்

# தவறுகள் குறிப்பிடப்பட்டுள்ளன ஆனால் தீர்வுகள் தவிர்க்கப்பட்டிருக்கின்றன

2ம் பக்கத் தொடர்ச்சி

அளவில் செய்யும் அவமானகரமான ஊழல்களுக்கு என்ன செய்வது? திறனற்ற நிர்வாகம் இன்னும் இதுபோன்ற தீமைகள் மற்றும் முறைகேடுகள் குறித்து என்ன சொல்லப்போகிறீர்கள்? இவைகள் பற்றியெல்லாம் குறிப்பிடப்படவே இல்லை; மாறாக பழி ஆசிரியர்கள் மீதும் மாணவர்கள் மீதும் சுமத்தப்பட்டுள்ளது. இது கொள்கை வகுப்பவர்களின் நேர்மையான நோக்கத்தையா காட்டுகிறது?

### தனியார்மயம்

“அபரிமிதமான தனியார்மயமாக்கல் மோசமான சூழலை உருவாக்கிவிட்டது” என்று தனியார்மயம் குறித்து வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால், ஏன் இது நடந்தது? அரசாங்கத்தைத் தவிர இதற்கு யாரைப் பொறுப்பாக்க முடியும்? “கல்வி என்பது பிரத்யேகமான முதலீடு செய்வதற்கான களம்” என்ற கோஷத்தை எழுப்பி அதன் மூலம் தனியார்மயம் என்ற மடைக்கதவைத் திறந்துவிட்ட முன்னாள் காங்கிரஸ் தலைமையிலான அரசாங்கத்தைத் தவிர வேறு யார் பொறுப்பு? பாஜக அரசாங்கங்கள் உள்ளிட்ட பிந்தைய அரசாங்கங்களைத்தவிர வேறு எவர் இதே அணுகுமுறையை பின்பற்றினார்கள்?

தற்போதைய அரசாங்கம் நேர்மையானதாகவும் வேறுபட்டதாகவும் இருந்தால், உடனடியாக கட்டண உயர்வு ரத்து, கல்வியின் அனைத்து மட்டங்களிலும் நன்கொடை, கேபிடேசன் நிதி போன்றவற்றை தடுக்க உறுதியான நடவடிக்கை, அதேபோன்று கல்வி மற்றும் இதர சேவைத் துறைகளை டபிள்யூ டி ஓ (உலக வர்த்தக அமைப்பில் – காட்ஸ் ஒப்பந்தத்திலிருந்து வெளியேறுதல்) விலிருந்து திரும்பப்பெறுதல் போன்ற தீர்வு நடவடிக்கைகள் எங்கே? முறைகேட்டில் ஈடுபடும், கல்விச் சூழலைப் பாழ்படுத்தும் கல்வி நிறுவனங்கள் மீது என்ன ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்போகிறார்கள்? அதுபற்றி ஒரு வார்த்தைகூட இந்த ஆவணத்தில் இடம்பெறவில்லை? தவறு செய்பவர்கள் மீது என்ன நடவடிக்கை என்பதுபற்றிகூட பேசாதவர்கள், தனியார்மயத்தால் விளையும் தீமைகளைப் பற்றி மேம்போக்காகப் பேசுவதால் என்ன பயன்? ஆனாலும்கூட இந்த ஆவணம் தனியார்மயத்தை மேலும் ஊக்கப்படுத்தவே எத்தனிக்கிறது. பல்வேறு அம்சங்களில் தனியார் பங்களிப்பை அதிகரிக்க வேண்டும் என்று அது கூறுகிறது. அதுவும் போதாதென்று வெளிநாட்டு அந்நிய கல்வி நிறுவனங்களும் இங்கே கல்வி நிலையங்களைத் தொடங்க அனுமதிக்கிறது. நமது நாட்டவர் நடத்தும் தனியார் நிறுவனங்களே இந்த நாட்டின் கல்வி சூழலை பாழ்படுத்துகின்றன என்றால், அந்நிய நாட்டவர் இங்கே முதலீடு செய்து இந்திய நாட்டின் கல்வியை மேம்படுத்துவார்களா?

### மதிப்பீடு : தடையில்லாத் தேர்ச்சிக் கொள்கை

தடையில்லாத் தேர்ச்சிக் கொள்கை இன்று கல்விக் களத்தில் எரியும் பிரச்சினையாக இருக்கிறது. “மாணவர்களின் படிப்பை மிகக்கடுமையாக பாதிப்பதால் தடையில்லாத்-தேர்ச்சிக் கொள்கையின் தற்போதைய ஷரத்துகளில் திருத்தம் கொண்டு வரப்படும். தடையில்லாத் தேர்ச்சிக் கொள்கை 5ஆம் வகுப்புவரை மட்டுமே இருக்கும், உயர் தொடக்கக்கல்வி அளவில் பெயிலாக்கும் முறை மீண்டும் கொண்டுவரப்படும். படிப்பில் பின்தங்கிய மாணவர்கள், பள்ளிகளில் நடத்தப்படும் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு (சிசிஇ) அடிப்படையில், கண்டறியப்பட்டு தீர்வு குறிப்புகள் வழங்கப்படும்”. என்று ஆவணம் கூறுகிறது.

“பள்ளிக் கல்வியில் தடையில்லாத் தேர்ச்சிக் கொள்கை பேரழிவை கொண்டுவந்துவிட்டது” என்று நாடு முழுவதும் ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர்தான் இந்த கருத்து வந்துள்ளது என்பதை குறித்துக்கொள்ள வேண்டும். அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட அனைத்து கமிட்டிகளும் பாராளுமன்ற நிலைக் குழுவும், அதேபோன்று பெருவாரியான மாநிலங்களும் தடையில்லாத் தேர்ச்சிக் கொள்கைக்கு எதிராக நிற்கின்றன.

இந்தத் தடையில்லாத் தேர்ச்சிக் கொள்கையின்படி ஒரு மாணவர் ஒரு நாள் பள்ளிக்கு வந்தாலும் அவரை அடுத்த வகுப்பிற்கு அனுப்ப வேண்டும் என்று இருக்கிறது. இதன் மூலம் மாணவர்களின், குறிப்பாக ஏழை எளிய பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் முயன்று படிக்கும் ஆர்வம் திட்டமிட்டு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு குறைந்தபட்ச அறிவைக்கூடப் பெறாமல் அடுத்த வகுப்புக்கு மாணவர்களை வெறுமனே அனுப்புவதென்பது படிக்க விரும்பும் மாணவர்களிடம்கூட எதிர்விளைவை ஏற்படுத்தியுள்ளது. ஆனாலும்கூட மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் ஒன்றும் தெரியாதது போல் பாசாங்கோடு ஒப்புக்கொண்டு அரைமனது நடவடிக்கையையே எடுத்துள்ளது. அதுவும்கூட மக்களின் அழுத்தத்தால்தான். ஆனாலும்கூட கல்வி ஆரம்பிக்கும் 1ஆம் வகுப்பு முதல் பாஸ் பெயில் முறையை மீண்டும் அமல்படுத்த பரிந்துரைக்கவில்லை. இந்தக் கொள்கை தற்போது இரண்டுவகையான மாணவர்களை உருவாக்கும். ஒன்று அரசாங்கம் நடத்தும் அல்லது அரசாங்க உதவியோடு நடத்தப்படும் ஏழை எளிய மாணவர்கள் பயிலும் பள்ளிகளிலிருந்து வரும் மாணவர்கள் ஒரு ரகம், அங்கே தடையில்லாத் தேர்ச்சிக் கொள்கை இருக்கும். மற்றொரு ரகம், வசதிபடைத்த மாணவர்கள், அதேபோல் அதிக கட்டணம் செலுத்தி பயிலும் தனியார் பள்ளிகளிலிருந்து வரும் மாணவர்கள், அங்கே கட்டமைப்பு வசதிகள், முறையான தேர்வுகள் அதோடு தேவைப்பட்டால் பாஸ் பெயில் இருக்கும். எனவே நல்ல கல்வி வேண்டுமெனில் சாமானிய மக்களும் தங்களது குழந்தைகளை, தங்கள் சக்திக்கு மீறி கட்டணம் செலுத்தி தனியார் பள்ளிக்கு அனுப்ப நிர்ப்பந்திக்கப்படுவர். அரசாங்கப் பள்ளிகள் மாணவர் சேர்க்கை இல்லை என்ற காரணம் கூறி மூடப்படும். இது தற்போது தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களில் வேகமாக ஏற்கனவே நடைபெற்று வருகிறது. ஆக சாமானிய மக்களுக்கு கல்வியை மறுக்க வேண்டும் என்று ஆட்சியாளர்களும் கொள்கை வகுப்பாளர்களும் சுதந்திரம் பெற்றது முதலே தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் முயற்சிக்கு இது கச்சிதமாகப் பொருந்தும். மாணவர்கள் நலன்களுக்கு இது முற்றிலும் எதிரானது, விரோதமானது. ஆக, ஏதாவது ஒரு காரணத்தைக் கூறி, நயவஞ்சக தந்திரங்களைப் பின்பற்றி தடையில்லாத் தேர்ச்சிக்கொள்கையை கடைசி வரை வைத்திருக்கு விரும்புகின்றனர்.

தேர்வு சீர்திருத்த நடவடிக்கை என்ற பெயரில், பத்தாம் வகுப்பு இறுதித்தேர்வில் கணிதம், அறிவியல், மற்றும் ஆங்கிலம் போன்ற பாடங்களில் அதிக தேர்ச்சியின்மையை காரணமாகக் கூறி அப்பாடங்களில் இரண்டு வகையான தேர்வுகளை இந்த ஆவணம் முன்மொழிகிறது. ஆனால் 'படிப்பில் பலவீனமாக' உள்ள மாணவர்களுக்கு உதவுவதற்கு கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதுபற்றியோ, போதுமான எண்ணிக்கையிலான ஆசிரியர்களை நியமிப்பது குறித்தோ, சிசிஇ (CCE - Continuous and Comprehensive Evaluation) முறைகளை குறித்தோ ஒருவார்த்தைகூட கூறவில்லை. இந்த நடவடிக்கை நிச்சயமாக இருவிதமான மாணவர்களை உருவாக்கும்: கட்டமைப்பு வசதிகள் இல்லாத, “தடையில்லாத் தேர்ச்சி உடைய” பள்ளியில் பயிலும் மாணவர்கள் திறமை குறைவாகப் பெறுவர், இதனால் உயர்கல்வியிலிருந்து வெளியேற்றப்படுவர். அவர்கள் வேலைசார் கல்விக்கு தள்ளப்படுவர், இறுதியில் கடுமையான போட்டியுடைய நிலையற்ற வேலை சந்தையில் தள்ளப்பட்டு திக்கற்று நிற்பர். மற்றவர்கள் அதிக கட்டணம் செலுத்தி தனியார் பள்ளிகளில் முறையாக பயிற்றுவிக்கப்பட்டு, தேர்வுகள் நடத்தப்பட்டு சிறப்புப் பயிற்சிகள் வழங்கப்பட்டு உருவாக்கப்படும் மாணவர்கள், அவர்கள் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் குறைந்த அளவே இருக்கும் வேலைவாய்ப்புகளை தேடிக்கொள்வர். இந்த வேதனையான முடிவுக்கு மாறாக வேறு நல்ல நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு என்இபி சிந்திக்கக்கூடாதா?

செமஸ்டர் மற்றும் ட்ரைசெமஸ்டர் (இருபருவம் மற்றும் முப்பருவம்) மூலமாக மொத்த பாடத்திட்டத்தை சிறு சிறு பகுதிகளாகப் பிரிப்பது மற்றும் கலப்பு துறைகள் சார்ந்த பாட தெரிவு அடிப்படையிலான கிரெடிட் வழங்கும் முறை ( Choice Based Course Credit System) போன்றவை எல்லாம் கல்வியில் தீய தாக்கத்தை ஏற்படுத்துவதால் அவற்றின் மீது கடுமையான விமர்சனங்கள் எழுந்துள்ளன. இவை முழுமையான ஒருங்கிணைந்த அறிவைப் பெறுவதற்கு தடையாக இருக்கின்றன. ஆனால் மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் இந்த முறைகளுக்கு மேலும் அழுத்தம் தருவதை நிறுத்த வேண்டும். அதுபோல பொதுத் தேர்வுகளை பலகீனப்படுத்தும் கொள்கைகளையும் ஊழல், பாரபட்சம், திட்டமிட்டு பழிவாங்குதல் போன்றவற்றிற்கு ஏதுவாக இருக்கும் முழுமையான சிசிஇ போன்ற அகமதிப்பீடு முறைகளை வலியுறுத்துவதற்கு மாறாக அவற்றை உடனடியாகத் திரும்பப் பெறவேண்டும்.

### பயிற்று மொழி

பயிற்று மொழி (Medium of Instruction) குறித்து அது கூறியிருப்பதாவது, “விரும்பினால், அனைத்து மாநிலங்களும் யூனியன் பிரதேசங்களும் பள்ளிகளில் ஐந்தாம் வகுப்பு வரை, தாய் மொழி, உள்ளூர் அல்லது பிராந்திய மொழியைப் பயிற்றுமொழியாகக் கொண்டு கல்வி வழங்கலாம்” என்று அது கூறுகிறது. இங்கே ‘அல்லது’ என்பதை கவனிக்கவும். இது தாய்மொழிக்குப் பதிலாக பிராந்திய மொழி என்ற பெயரில் இந்தி ஊடுருவ வாய்ப்பாகிவிடும். இலக்கியத்தைப் பற்றியும் மொழிக் கல்வியின் மற்ற அம்சங்களைப் பற்றியும் எந்த அவசியமும் வலியுறுத்தப்படாததால் ஆங்கிலமும்கூட வெறும் நடைமுறை அளாவிலானதாக சுருக்கப்பட்டு கற்பிக்கப்படுவதன் மூலம் அதன் முக்கியத்துவம் குறைக்கப்படும்.

எல்லாவற்றிற்கும் மேலாக, “இந்திய மொழிகளின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் சமஸ்கிருதத்தின் சிறப்பான முதன்மையினைக் கருத்தில் கொண்டும், நாட்டின் பண்பாட்டு ஒற்றுமைக்கு அதன் தனித்தன்மைவாய்ந்த பங்களிப்பினைக் கருதியும் பள்ளிகளிலும் பல்கலைக்கழக மட்டத்திலும் சமஸ்கிருதத்தை பரப்பிட தாராளமாக வசதிகள் செய்யப்படும்” என்று குறிப்பிட்டுள்ளது. இது வெறும் வார்த்தைகளோடு நிற்கவில்லை. மே 2016இல் மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் ஐஐடி மற்றும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இதர உயர்கல்வி நிறுவனங்களுக்கு வழங்கிய உத்தரவில் “சமஸ்கிருத இலக்கியத்தில் உள்ள அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயில்வதற்கும் நவீன பாடங்கள் மற்றும் சமஸ்கிருத இலக்கியத்தில் உள்ள அதோடு தொடர்புடைய பாடங்களை தொடர்புபடுத்திப் படிப்பதற்கு ஏதுவாக” சமஸ்கிருதப் பாடங்களை அறிமுகப்படுத்துவதற்காக “சமஸ்கிருத செல்களை” தொடங்குமாறு அறிவுறுத்தியது. மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் அதன் இணையதளத்தில் (http://mhrd.gov.in/sites/upload_files/mhrd/files/Report-CVRM.pdf) என்ற ஆவணத்தை “சமஸ்கிருதத்தை வளர்ப்பதற்கான தொலைநோக்கு மற்றும் பாதை வரைபடம்– 10 ஆண்டு திட்டம்” என்ற தலைப்பில் பதிவேற்றம் செய்துள்ளது.

அதில் ‘சித்தாந்த ஷிரோன்மணி, வ்ரிக்ஷா ஆயுர்வேதா, உபவான வினோதா, மயமடம் போன்ற நூற்றுக்கணக்கான நூல்கள் உள்ளன. அவை எல்லாம் ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்பு அம்சங்களில் மிகவும் செல்லத்தக்கவையாக உள்ளன’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆக, வேதகாலம் பற்றிய கற்பனையான பெருமிதங்களை நிலைநாட்டுவதற்கான திட்டத்தோடு கல்வியின் அனைத்து மட்டங்களிலும் சமஸ்கிருதத்தைத் திணிக்க அரசாங்கம் எத்தனிக்கிறது என்பது தெளிவாகிறது. என்ன இரட்டைவேடம்! ஒருபுறம் உலக அளவில் கால் பதிப்பதற்காக சிலருக்கு மட்டும் திறன் வளர்ப்பதற்காக விஞ்ஞானத்தின் தொழில்நுட்ப அம்சங்களை கற்பிக்கவும், பெருவாரியான வெகுஜனங்

தொடர்ச்சி 4ம் பக்கம்

# அறிவியல்பூர்வ கல்வியையும் சிந்தனையையும் துடைத்தெறிவதில் என்இபி 2016 ஒரு மைல்கல்லாக அமைந்துவிடும்

*3ம் பக்கத் தொடர்ச்சி*

*களுக்கு தொழில்சார் கல்வியையும் முன்மொழிகிறது. மற்றொருபுறம் உற்றுநோக்கல், பரிசோதனை செய்தல், கருத்தியல் உருவாக்கல் மற்றும் அந்தக் கருத்தியல்களை மனிதகுல அறிவுக் களஞ்சியத்தில் ஏற்றுக்கொள்வதற்கு முன்பாக யதார்த்தத்தில் பரிசோதித்தல் அல்லது சரிபார்த்தல்கள் என்ற உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விஞ்ஞானபூர்வ முறையியலின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட நவீன விஞ்ஞானத்திற்கு வெகுதூரத்தில் உள்ள சமஸ்கிருதத்தில் உள்ள விஷயங்களை எல்லாம் விஞ்ஞானம் என்ற பெயரில் கொண்டுவருவதற்கான செயல்களை அது முன்மொழிந்துள்ளது. ஒன்றுக்கொன்று ஒத்துப்போகாத இந்த இரண்டு விதமான கலவை நமது கல்வியை எங்கு இட்டுச் செல்லும்? இதற்கு மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் பதில் கூற வேண்டும்.*

### தன்னாட்சியை அதிகாரவர்க்கத்தைக் கொண்டு அடக்குதல்

*‘பல்கலைக்கழக மானியக்’ குழு -யுஜிசி* (UGC - University Grant Commission) *மற்றும் அகில இந்திய தொழில் நுட்பக்கல்வி குழு - ஏஐசிடிஇ* (AICTE - All India Council for Technical Education) *போன்றவற்றை முற்றிலும் திருத்தி அமைக்கவும் அதேபோல கல்வியை நிர்வகிப்பதை நிர்ணயிக்கவும் பரிந்துரைகளை இந்த ஆவணம் வழங்கியுள்ளது. கல்வித் துறை, பள்ளிகள் மற்றும் பல்கலைக்கழகங்களை நிர்வகிப்பதில், மேற்பார்வையிடுவதில் அதேபோல் ஆசிரியர் பணியிடங்களுக்கு தேர்வு செய்தல், பயிற்சியளித்தல் மற்றும் பணியமர்த்துதல் போன்ற நடவடிக்கைகள் உள்ளிட்டவற்றில் மாற்றம் கொண்டுவர முன்மொழிகிறது. அவர்களின் திட்டம் எதுவானாலும் அதனை சுலபமாக அமுல்படுத்துவதற்காக இவையனைத்தும் கல்வியமைப்பின் மீதான மத்தியப்படுத்தப்பட்ட அதிகார வர்க்க நிர்வாகம் மற்றும் கட்டுப்பாட்டை மேற்கொள்வதற்கு இட்டுச் செல்லும். அது தன்னாட்சி கோட்பாட்டிற்கே சாவுமணி அடித்துவிடும்.*

*இதற்குப் பதிலாக, வியாபாரமயமாக்கலை முன்நிறுத்துவதற்காக கல்வி நிறுவனங்கள் தரச்சான்று பெறவேண்டும் என்பதையும் யுஜிசி நிதி பெறுவதற்கு தரச்சான்று அவசியம் என்பதையும் தனியார் பல்கலைக்கழகங்கள் மசோதா, அந்நியப் பல்கலைக்கழகங்கள் மசோதா, கல்வித் தீர்ப்பாய மசோதா, என்சிஹெச்இஆர் மசோதா, மத்தியப் பல்கலைக்கழகங்கள் சட்டம் போன்றவற்றின் மூலமாக கல்வியை எதேச்சயதிகாரமானதாக ஆக்கி, அதனை மையப்படுத்தும் முயற்சிகளை மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் நிறுத்தவேண்டும். கல்வி நிறுவனங்களின் தன்னாட்சி உரிமை மற்றும் கல்வி சமூகத்தின் ஜனநாயக உரிமைகளை தடுக்கும் கொள்கைகளை கடைப்பிடிப்பதையும் உடனடியாக நிறுத்த வேண்டும், அதோடு மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத ஊழியர்களின் அனைத்து ஜனநாயக உரிமைகளையும் மீள்கொண்டு வரவேண்டும். கல்வி நிறுவனங்களின் தன்னாட்சியை ஆக்கிரமித்து தடுப்பதை உடனடியாக நிறுத்த வேண்டும்.*

### அந்நியப் பல்கலைக்கழகங்கள்

*“உலகின் மிகச்சிறந்த 200 பல்கலைக்கழங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட சில இந்தியப் பல்கலைக்கழகங்களோடு இந்தியாவில் கூட்டுச் செயல்பாடு மேற்கொள்ள ஊக்குவிக்கப்படும். தேவைப்பட்டால் அதற்கு வழிவகை செய்ய சட்டம் இயற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அயல்நாட்டு பல்கலைக்கழகங்கள் இந்தியாவில் படிக்கும் இந்திய மாணவர்களுக்கு அவர்களது பட்டத்தை வழங்குவதற்கும் அந்தப் பட்டங்கள் அந்தப் பல்கலைக்கழகங்கள் அமைந்துள்ள நாட்டில் செல்லத்தக்கதுமாக இருக்கும் வகையில் விதிமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைகள் வகுக்கப்படும்” என்று ஆவணம் கூறுகிறது.*

*இது இந்தியாவில் உள்ள அரசாங்க நிதி உதவியில் இயங்கும் பல்கலைக்கழகங்களை கொள்ளைப்புறவாயிலாக தனியாருக்குத் தாரை வார்க்கும் முயற்சியாகும். அந்நியப் பல்கலைக்கழகங்கள் இங்கு வர ஏதுவாக இங்கு உள்ள பல்கலைக்கழகங்களில் கட்டண உயர்வுகள் இருக்கும். இன்றைய உலகமயமாக்கல் குறிப்பாக காட்ஸ் ஒப்பந்தம் கல்வி என்பதை உலகளாவிய வர்த்தகமாகப் பார்க்கிறது. இந்த சூழலில் அந்நிய கல்வி நிறுவனங்கள், அவை மிகப் பாரம்பரியமிக்க புகழ்பெற்றவையாக இருந்தாலும் கூட, இந்தியாவில் தங்களது வளாகங்களை நிறுவுவதன் மூலம் அவற்றின் முத்திரை மதிப்பினைப் பயன்படுத்தி அவை தொழிற்சாலைகள், பணம் சம்பாதிக்கும் மையங்கள் என்பதைத் தாண்டி செயல்படுமா? ஏற்கனவே உலகம் முழுவதும் உள்ள புகழ்பெற்ற சிறந்த கல்வி நிறுவனங்கள்கூட தங்களது தரத்தை வீழ்ச்சியிலிருந்து காப்பாற்ற முடியாமல் தத்தளிக்கின்றன.*

*நமது நாடு உள்ளிட்ட அனைத்து நாடுகளிலும் உயர் கல்வியில் நல்ல தரமான ஆசிரியர்களின் கடுமையான பற்றாக்குறை நிலவுகிறது. காட்ஸ் ஷரத்துக்களில் கூறப்பட்டிருப்பதுபோல், கல்வியில் தலை சிறந்த கல்வியாளர்களை உயர்ந்த சம்பளத்தில் அமர்த்துவதால் தரம் குறைவதையோ அல்லது ஆசிரியர்கள் பற்றாக்குறையையோ போக்கிவிட முடியுமா? இந்த அந்நிய கல்வி நிறுவனங்கள் குறித்து நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி திரு வெங்கட்ராமன் ராமகிருஷ்ணன் கூறுகையில், “குறைந்த அளவு புகழ்பெற்ற பல்கலைக்கழகங்கள் தங்களது வியாபார நலனுக்காக வேண்டுமானால் தங்களது கிளைகளை இங்கு நிறுவலாம்” என்று கூறியுள்ளதை இங்கு நினைவுபடுத்துகிறோம்.*

*இந்த அந்நிய நிறுவனங்கள் நாட்டின் கல்வித் தேவைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்குமா? ஒரு குறிப்பிட்ட சூழலில் பாடத்திட்டத்தை வரையறுப்பது, பாடங்களைத் தேர்வு செய்வது ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களின் வேலை செய்யும் சூழல்களுக்கான விதிமுறைகள் வகுப்பது, மாணவர்களின் ஜனநாயக உரிமைகள் போன்றவற்றிற்கு முன்னுரிமை வழங்குமா? நிச்சயமாக வழங்க மாட்டார்கள். அவர்களுக்கு நாட்டின் தேவை இரண்டாம் பட்சம்தாம், அவர்களது நோக்கம் வியாபாரம் செய்வது ஒன்றே, அதன்மூலம் லாபமீட்டுவது மட்டுமே. இந்த ஆவணத்தில் கூறப்பட்டிருப்பது போல் ஏற்கனவே தனியார்மயம்–வியாபாரமயத்தால் சீரழிந்துள்ள கல்விச் சூழலை இது மேலும் நாசப்படுத்தவே செய்யும்.*

### முடிவுரை : புதிய மொந்தையில் பழைய கள்

*வரைவு தேசிய கல்விக் கொள்கை **2016**இல் கூறப்பட்டுள்ள முன்மொழிவுள், பரிந்துரைகள், நடவடிக்கைகளுக்கும் இதற்கு முந்தைய தேசிய கல்விக் கொள்கை **1986** மற்றும் யுபிஏ ஆட்சியின் போது கூறப்பட்ட தேசிய அறிவுசார் ஆணைய* (NKC - National Knowledge Commission) *அறிக்கை அல்லது யஷ்பால் கமிட்டி அறிக்கை ஆகியவற்றில் கூறப் பட்டுள்ளவற்றிற்கும் எவ்வித வேறுபாடும் இல்லை.*

*முந்தைய ஆவணங்களில் அதிகபட்ச கற்றல் மற்றும் குறைந்த பட்ச கற்றல் என்று பரிந்துரைக்கப்பட்டது. தற்போது இருவிதமான பாடத்திட்டம் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது, அதாவது வசதி படைத்தவர்களுக்கு ஒன்று சாமானிய ஏழை குடும்பங்களிலிருந்து வரும் குழந்தைகளுக்கு வேறொன்று என்று கூறப்பட்டுள்ளது. முந்தைய ஆவணங்களைப் போலவே கல்வித்தரம் சீரழிந்துவிட்டது என்று நீலிக்கண்ணீர் வடித்துக்கொண்டே அதற்கு உரிய தீர்வை வழங்காமல் இருப்பது, உயர்கல்வியை ஏழைக் குடும்பங்களின் மாணவர்களுக்கு கட்டுப்படுத்துவது, இல்லை மறுப்பது, (தனியார்மயத்தால் கல்வி நாசமாகிவிட்டது என்று கூறிக்கொண்டே) தனியார்மயத்தை மேலும் உக்கிரமாக திணிப்பது, எந்த எதிர்ப்பு வந்தாலும் தங்களது திட்டத்தை இலகுவாக நிறைவேற்றுவதற்காக, அதிகாரத்தை மையப்படுத்தும் போக்கு (தேர்வுகள் நடத்துவது, நிர்வாகம் மற்றும் ஆளுமையில் மத்திய அதிகாரத்தை மென்மேலும் நிறுவுவது) : என இவை எல்லாவற்றிலும் இதற்கு முந்தைய ஆவணத்தில் என்ன கூறப்பட்டதோ அதற்கும் இந்த ஆவணத்திற்கும் எந்த வேறுபாடும் இல்லை, இந்த புதிய ஆவணத்தில் அவற்றைவிட உக்கிரமாகவும் மேலும் மையப்படுத்துவதும் இருக்கிறது. ஆனால் மிகவும் அபாயகரமானது வேறிடத்தில் உள்ளது.*

### மிகவும் நாசகரமான அம்சம்

*நாசகரமான அம்சங்கள் முகவுரையில் தெளிவாகவே தெரிகிறது. அங்கு கூறப்பட்டிருப்பதாவது: “சாரக்கா மற்றும் சுஷ்ருதா, ஆர்யபட்டா, பாஸ்கராச்சார்யா, சாணக்யா, பதஞ்சலி மற்றும் வச்சாயாய்னா மற்றும் இதுபோன்ற எண்ணற்ற இந்திய மேதைகள் கணிதம், வானியல், இயற்பியல், வேதியியல், மருத்துவ அறிவியல் மற்றும் அறுவைச் சிகிச்சை, நுண்கலை, இயந்திர மற்றும் உற்பத்தித் தொழில்நுட்பம், கட்டிட பொறியியல் மற்றும் கட்டுமானம், கப்பல் கட்டுதல் மற்றும் கடல்வழிப் போக்குவரத்து, விளையாட்டு என்பனபோன்ற இத்தனை துறைகளில் உலக அறிவுக்களஞ்சியத்திற்கு அளப்பரிய பங்களிப்பு செய்துள்ளனர். சுதந்திரப் போராட்ட காலத்தில் கோகலே, ராம் மோகன் ராய், பண்டிட் மதன் மோகன் மாலவியா மற்றும் காந்திஜி ஆகியோர் இந்திய மக்களுக்கான சிறந்த கல்விக்காக பணியாற்றினர்”.*

*இந்துப் பட்டியலில் மனிதகுல அறிவுக்களஞ்சியத்திற்கும் நவீன அறிவியலுக்கும் பங்களிப்பு செய்த ஜெகதீஸ் சந்திர போஸ், மேக்னாத் சாகா, சத்யேந்திரநாத் போஸ், சர் சி வி ராமன், பிசி ராய் போன்ற இன்ன பிற உலகப் புகழ் பெற்ற இந்திய விஞ்ஞானிகளின் பெயர் விடுபட்டுள்ளது. மேலே கூறப்பட்ட பட்டியலில் உள்ள நான்கு அறிஞர்கள் விடுதலைப் போராட்ட காலத்தில் கல்விக்காக பணியாற்றியவர்கள் இந்துப் பட்டியலில் விஞ்ஞானபூர்வ மதச்சார்பற்ற கல்விக்காக விடாப்பிடியாகப் போராடிய மிகவும் முக்கியமான, இல்லை ஒரே கல்வியாளரான ஈஸ்வர சந்திர வித்யாசாகரின் பெயரை இந்த ஆவணம் மிகவும் சாதுர்யமாக புறக்கணித்துள்ளது. இந்துப் புறக்கணிப்புகள் எதைக் குறிக்கின்றன, அதை எளிதாக தீர்மானித்து விடமுடியும்.*

*பின்னணியில் நடைபெறக்கூடிய சம்பவங்களும் உதிர்க்கப்படும் வார்த்தைகளும் மிகவும் முக்கியமானவை. நாம் குறிப்பிட்டதைப் போல, தேசியக் கல்விக் கொள்கையை தயாரிக்கும் செயல்முறைப் போக்கு நிகழ்ந்துகொண்டிருக்கையில், நாங்கள் எங்கள் கருத்துக்களை சமர்ப்பிப்போம் அவை நிச்சயம் அமல்படுத்தப்படும் என்று ஆர்எஸ்எஸ் வெளிப்படையாக பிரகடனப்படுத்தியது. கல்வியை இந்து சிந்தனையின் அடிப்படையில் முற்றிலுமாக சீரமைக்க வேண்டும் என ஆர்எஸ்எஸ் மற்றும் அதன் துணை அமைப்புகள் வெளிப்படையாகவே வலியுறுத்தின. கடந்தகால இந்திய புகழையும் பாரம்பரியத்தையும் உயர்த்திப்பிடிக்கிறோம் என்ற பெயரில் ஆர்எஸ்எஸ்–பாஜக தலைவர்கள் திரும்பத் திரும்ப தங்களது இந்துத்துவா திட்டத்தை பேசினர், அதன்படி நவீன விஞ்ஞானபூர்வ கல்வியை வெளிநாட்டுக் கல்வி என்று வெளிப்படையாகக் கூறினர். ஆனால் அந்நிய பல்கலைக்கழகங்களை வர்த்தகம் செய்வதற்காக மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் சிவப்பு கம்பளம் விரித்து வரவேற்கிறது. விஞ்ஞானம் என்ற பெயரில் முற்றிலும் விஞ்ஞானத்திற்குப் புறம்பான, சொல்லப்போனால் விஞ்ஞானத்திற்கு தடையாக இருக்கக்கூடிய கருத்துக்களைப் பரப்பிவருகின்றனர். சமஸ்கிருதம், இந்து காவியங்களான கீதை, ராமாயணம், மகாபாரதம் போன்றவற்றை பல்கலைக்கழகங்களின் பாடத்திட்டத்திலும் சேர்க்க வலியுறுத்துவது போன்றவை அவர்களது நோக்கத்தை தெளிவு படுத்துகிறது. இந்தப் பின்னணியில் விஞ்ஞானபூர்வ நவீன கல்வியை அதிகாரபூர்வமாகவே முற்றிலும் தடுக்கும் முயற்சியானது இந்த வரைவு கொள்கையில் பேரபாயமான அறிகுறிகள் இருப்பதையே காட்டுகின்றது. அதில் எந்த சந்தேகமும் இல்லை.*

தொடர்ச்சி 7ம் பக்கம்

# சோசலிச வடகொரியா மீது சளைக்காமல் தொடரும் ஏகாதிபத்தியத் தாக்குதல்கள்

கொரிய ஜனநாயக மக்கள் குடியரசு (Democratic People's Republic of Korea (DPRK) or North Korea) என்றழைக்கப்படும் வடகொரியா நாட்டின் அரசாங்கம் ஜனவரி 5, 2016 அன்று 'ஹைட்ரஜன் அணுகுண்டை' வெற்றிகரமாக பரிசோதித்ததாக அறிவித்தது. அடுத்த ஒரு மாதத்திலேயே பிப்ரவரி 7 அன்று பூமியைக் கண்காணிக்கும் செயற்கைக் கோளை விண்ணில் பாய்ச்சி பூமியை சுற்றிவர வைத்துவிட்டது. இவ்விரு நிகழ்ச்சிகளும் முதலாளித்துவ உலகை ஆத்திரமூட்டியது. குறிப்பாக உலக முதலாளித்துவ–ஏகாதிபத்திய உலகின் தலைவனான அமெரிக்காவிற்கும் (யுஎஸ்ஏ) அதன் அடிமைக்கூட்டாளி தென்கொரியாவிற்கும் கோபம் வந்ததில் ஆச்சரியமில்லைதான். அவர்கள் உடனே வடகொரியாவின் இச்செயல்கள் உலக பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் என்றெல்லாம் கடுமையாக பிரச்சாரம் செய்து உலகை நம்பவைக்க முயற்சித்தனர். நீண்ட தூரம் பாயும் ஏவுகணை போன்ற பல தடைசெய்யப்பட்ட தொழில்நுட்பங்களை வடகொரியா வளர்த்துக்கொள்வதாக குற்றம் சாட்டினர் (space.com ஐப் பார்க்க).

சக்திவாய்ந்த ஊடகங்களைக் கையில் வைத்திருக்கும் முதலாளித்துவ–ஏகாதிபத்தியவாதிகள் நடுநிலை சிந்தனையாளர்களில் ஒரு பகுதியினரையாவது குழப்புவதற்கு தங்கள் பிரச்சாரத்தை நிச்சயம் செய்வார்கள். சோசலிசத்தை உயர்த்திப் பிடித்திருக்கும் எஞ்சிய நாடுகளில் ஒன்றான வடகொரியா, யுத்தவெறி ஏகாதிபத்தியவாதிகள் மற்றும் அவர்களின் அடிவருடி முதலாளித்துவ நாடுகளின் கடும் எதிர்ப்பைச் சந்தித்துக் கொண்டிருக்கையில் சில உண்மைகளை மக்களிடம் கொண்டுசெல்ல வேண்டியது, இன்று புரட்சிகர சித்தாந்தத்தை உயர்த்திப் பிடித்திருக்கும் வெகுசிலரின் கடமையாக இருக்கின்றது.

### உலக பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருப்பவர் யார்?

முதலில், எதைப்பற்றி இந்த முதலாளித்துவப் பத்திரிகைகள் கூச்சலிட்டுக் கொண்டிருக்கின்றன என்பதைப் பார்ப்போம். 2006ஆம் ஆண்டு அக்டோபரில் அணு ஆயுத சோதனையை வடகொரியா நடத்தியது. இதனால் அமெரிக்காவுடனும் தென்கொரியாவுடனும் அந்நாட்டின் உறவு மீண்டும் பாதிக்கப்பட்டது. பிறகு 2009 மற்றும் 2013இல் வடகொரியா இரண்டாவது மூன்றாவது அணு ஆயுத சோதனைகளை முறையே நடத்தியது. தற்போது நடத்தப்பட்ட அணு சோதனை அந்நாட்டின் நான்காவது தரைக்கடியிலான சோதனையாகும்.

ஆனால், அமெரிக்கா வான் வெளியிலும், விண்வெளியிலும், கடல் ஆழத்திலும் 216 சோதனைகள் உட்பட இதுவரை சுமார் 1054 அணு சோதனைகளை நடத்தியுள்ளதாக அதிகாரப்பூர்வத் தகவல்கள் சொல்கின்றன. சமீபத்தில் டிச 7, 2012இல் நிவாடா சோதனைக் களத்தில் அமெரிக்கா நடத்திய அணு வெடிப்பு போன்றவை எல்லாம் இந்த அதிகாரப்பூர்வ அறிக்கையில் அடங்காது. உண்மையில், அணு ஆயுதம் ஏந்திச் செல்லும் திறன் கொண்ட ஏவுகணைகளை பரிசோதிக்க, அமெரிக்காவானது தொடர்ச்சியாக குறை சக்தி அணு சோதனகளை (Subcritical Nuclear Tests) நடத்திக் கொண்டுதான் இருக்கின்றது. முழுமையான அணு ஆயுதப் பரிசோதனைத் தடைச் சட்டத்தில் (CTBT) அமெரிக்கா இன்னமும் கையெழுத்திடவில்லை. அணு ஆயுதங்களை நவீனப்படுத்த 1 ட்ரில்லியன் டாலர் அதாவது இலட்சம் கோடி டாலர் செலவு செய்கின்றது. அணு ஆயுதங்கள் உலகை அச்சுறுத்துகின்றன என்றால் அதிகமாக அச்சுறுத்துவது யார்? வடகொரியாவா அமெரிக்காவா?

அதுமட்டுமல்ல, அணு ஆயுதங்களை வைத்திருக்கின்ற பிற நாடுகளும்கூட தங்களது போர்த்தளவாடங்களின் திறனை உயர்த்திக்கொள்ள மும்முரமாக இருக்கின்றனர். அவைகளில், இந்தியா, பாகிஸ்தான் மற்றும் இஸ்ரேலும் அடங்கும். உலகில் உள்ள 9 அணு ஆயுத சக்திகளும் அமெரிக்காவின் ஆதரவில் இருக்கும் 29 பிற நாடுகளும் தங்களது நாட்டின் பாதுகாப்பிற்கு அணு ஆயுதம் அவசியம் என நினைக்கின்றன. எனவேதான் சமீபத்திய சோதனைக்குப்பின் வடகொரிய அரசாங்கம் இவ்வாறு கூறியிருக்கின்றது: "மனித இனத்திற்கு எதிரான தாக்கங்களை ஏற்படுத்துகின்றன என்பதால் நாம் உயிரியல் மற்றும் வேதியியல் ஆயுதங்களையும் கண்ணிவெடிகளையும் கொத்துகுண்டுகளையும் தடை செய்திருக்கிறோம். ஆனால் இவையனைத்தையும்விட சக்திவாய்ந்த குண்டை நாம் இன்னமும் தடைசெய்யவில்லை".

### முரட்டுத்தனமான அரசு எது?

சோசலிச முகாமின் வீழ்ச்சிக்குப்பின் அமெரிக்கா தன்னைத்தானே உலகத்தின் பாதுகாவலனாக அறிவித்துக்கொண்டு, தனது கட்டளைக்கு அடிபணிய மறுக்கும் நாடுகளை முரட்டு நாடுகள் (Rogue States) என அறிவித்து அவற்றை வேட்டையாடத் துவங்கியது. முரட்டு அரசுகளின் கையில் அணு ஆயுதம் இருந்தால் அது உலகிற்கு அபாயம் எனவும் கூச்சலிடுகின்றது.

உண்மையில் எது முரட்டு அரசு? சட்டத்தையும் நாகரிகத்தின் நியதிகளையும் மீறி ராணுவ பலத்தை ஏவி பிறர்மீது யார் தாக்குதலைத் தொடுக்கிறார்களோ அவர்களைத்தான் முரட்டு அரசுகள் எனச் சொல்லவேண்டும். தோன்றிய நாள்முதல் வடகொரியா அமெரிக்காவிடமிருந்தும் தென்கொரியாவிடமிருந்தும் பகைமையை சந்தித்து வருகின்றது. அமெரிக்காவை தாக்குவது இருக்கட்டும், என்றைக்காவது தனது அண்டை நாடான தென்கொரியாவை வடகொரியா தாக்கியிருக்கிறதா? மாறாக, இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு சோசலிச முகாம் தோன்றியதன் பின் உருவான பனிப்போர் காலக்கட்டத்தில் பிற நாடுகளில் மிரட்டல்கள், ராணுவ சதிக்கும்பல் அதிகாரத்தைக் கைப்பற்ற உதவியது என அமெரிக்கா நடத்திய எண்ணற்ற தாக்குதல்களின் பட்டியல் நீளமாக இருக்கின்றது. சோசலிச முகாம் இல்லாத இந்த புதிய உலகில் அமெரிக்காவின் சாதனைப்பட்டியல் என்ன? யாரும் ஒருமுறைகூட தன்னைத் தாக்காதிருந்தும் அமெரிக்கா எத்தனை நாடுகளை அழித்தொழித்திருக்கின்றது? இதன் யுத்தவெறிக் கொள்கைக்கு பலியான நாடுகள் எல்லாம் கியூபாவைத் தவிர்த்து பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருக்கின்றன. அவையெல்லாம் ராணுவ சக்தியிலும் பொருளாதாரத்திலும் அமெரிக்காவை விட மிகப் பலவீனமாகவல்லவா இருக்கின்றன? யுகோஸ்லாவியா, கொசோவா, சூடான், ஈராக், ஆஃப்கானிஸ்தான், லிபியா, சிரியா எனப் பல நாடுகள் அந்தப்பட்டியலில் அடங்கும். எந்த அரசும் அதன் ஆட்சியாளர்களும் உலகில் முதன்முதலில் அணு ஆயுதத்தைப் பயன்படுத்தி இலட்சக்கணக்கான அப்பாவி மக்களைக் கொன்று குவித்து அவர்களை முடமாக்கியிருக்கின்றனர் அமெரிக்காவா வடகொரியாவா? இவற்றில் எது முரட்டு அரசாக நடந்து கொண்டிருக்கின்றது?

### ஏகாதிபத்தியத்தின் போர் அச்சுறுத்தலை எதிர்கொள்வதெப்படி?

வடகொரியாவின் 22 வயதான பல்கலைக்கழக மாணவர் ரி சோல் யோங் கூறுகிறார்: "சக்திவாய்ந்த அணு ஆயுதங்களை நாம் வைத்திராவிட்டால், நாம் ஏற்கெனவே அமெரிக்காவின் அடிமைகளாக மாற்றப்பட்டிருப்போம்". அவர் சொன்னதில் தவறென்ன? இந்தக் கேள்விக்கு விடையளிப்பதற்கு முன்பாக, வடகொரியாவின் வரலாற்றை சுருக்கமாகத் தெரிந்துகொள்வது அவசியமாகும். இது உலகிற்குத் தெரிந்ததுதான் என்றாலும் ஏகாதிபத்தியவாதிகளின் பிரச்சாரத்தால் பல நேரங்களில் மறக்கப்பட்டுவிடுகின்றது அல்லது வேறொன்றாக வர்ணம் பூசப்பட்டு காட்டப்படுகின்றது.

வடகொரியாவிற்கெதிராக அமெரிக்காவின் பகைமை அறுபது ஆண்டுகளுக்கு மேலாக நீடிக்கின்றது. இரண்டாம் உலகப்போரின் இறுதியில் ஜப்பானிய ஏகாதிபத்தியம் வீழ்ந்து கொண்டிருந்தபோது அதன் ஆதிக்கத்தின் கீழ் இருந்த கொரியா நாட்டிற்கு அமெரிக்கா தனது ராணுவத்தை அனுப்பி கொரியாவின் தென் பகுதியை ஆக்கிரமித்தது. வடபகுதியையும் விரைவில் எடுத்துக் கொண்டுவிடலாம் என விருப்பம் கொண்டிருந்தது. ஆனால், ஜப்பான் ஏகாதிபத்தியத்திடமிருந்து விடுதலை பெறவேண்டி கொரியாவின் மலைகள் நிறைந்த வடக்குப் பகுதியில் கிம் இல் சுங் தலைமையில் கொரில்லா போரை வெற்றிகரமாக மக்கள் நடத்திக் கொண்டிருந்தனர். இப்போராட்டத்தை தோழர் ஸ்டாலின் தலைமையிலான சோவியத் தலைமை ஆதரித்தது. வியட்நாமிற்கு தோழர் ஹோ சி மின் எப்படியோ அப்படித்தான் கொரியாவிற்கு தோழர் கிம் இல் சுங் ஆவார். தொழிலாளிகளும் விவசாயிகளும் தங்களின் சொந்த கவுன்சில்களை அமைத்துக்கொள்ள கிம் இல் சுங் – இன் புரட்சிகர கொரில்லாப்படை உதவியது. இந்த கவுன்சில்கள் அதிகாரத்தை ஜப்பானியர்களிடமிருந்தும் அவர்களின் கூட்டாளிகளாக இருந்த உள்நாட்டு பூர்ஷ்வாக்கள் நிலச்சுவாந்தார்களிடமிருந்தும் பறித்துக் கொண்டது. ஆக, வடபகுதியில் நடந்தது மக்கள் புரட்சியாகும். அங்கு அமெரிக்காவால் காலடி எடுத்துவைக்கமுடியவில்லை.

ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகள் வெளியேற்றப்பட்டவுடன் கொரியாவை விட்டு அமெரிக்காவின் மற்றும் சோவியத்தின் படையினர் மூன்று ஆண்டுகளில் வெளியேறவேண்டும் என ஒப்புக்கொள்ளப் பட்டிருந்தது. அதன் மூலம் வடக்கு தெற்கு பகுதிகள் மீண்டும் இணைந்துகொள்ள வழிபிறந்திருக்கும். அதன்படி ரஷ்யா 1948இல் வெளியேறிவிட்டது. ஆனால் அமெரிக்கா சொன்னபடி வெளியேறவில்லை. அதன்மூலம் அமெரிக்கா ஏமாற்றியது மட்டுமல்ல, வடக்கும் தெற்கும் இணைவதையும் கெடுத்து, புதிதாக உருவான தென்கொரியாவில் சிங்மான் ரீ என்பவர் தலைமையில் தனது பொம்மை அரசாங்கத்தை நிறுவியது. அமெரிக்காவின் ஏமாற்றுச் செயலுக்குப் பின்தான் வடகொரியாவின் புரட்சிகரத் தலைமை வடபகுதியில் வடகொரியா என அழைக்கப்படும் கொரிய ஜனநாயக மக்கள் குடியரசை (DPRK) நிறுவியது.

இரண்டாண்டுகளுக்குப்பின் 1950இல் அமெரிக்காவானது வடகொரியா மீது முழுமையான போரைத் தொடுத்தது. நூறாயிரக்கணக்கான வலிமையான காலாட்படைகளை அனுப்பி வான்வெளி குண்டு வீச்சுத் தாக்குதலையும் அமெரிக்கா தொடுத்தது. பல இலட்சக்கணக்கான கொரிய மக்கள் கொல்லப்பட்டனர். போர் அதிகாரப்பூர்வமாக நிறுத்தப்படவில்லை. தற்காலிகச் சண்டை நிறுத்தம் (ceasefire) அறிவிக்கப்பட்டு போர் நின்றிருக்கிறது, அவ்வளவுதான். ஆனால், அமெரிக்கா தனது வரலாற்றில் முதலும் கடைசியுமாக சந்தித்த ஸ்தம்பித்துப் போனநிலை இந்தப் போரில்தானாகும். அமெரிக்க ராணுவ ஜெனரல் வில்லியம் டீன் கொரியர்களால் பிடிக்கப்பட்டு, அமெரிக்க வரலாற்றிலேயே கண்டிராத அளவிற்கு அவர்களின் படைகளை நீண்ட தூரத்திற்குப் பின்வாங்கச் செய்தது இந்தப் போர்தானாகும். ஆழ்ந்த வடபகுதியிலிருந்து தெற்கே ராணுவ எல்லைக்கோடுவரை அமெரிக்கப்படைகளை சுமார் 78 மைல்கள் கொரியப்படையினர் பின்செல்ல வைத்தனர். 'நாங்கள் பின்வாங்கவில்லை, வேறு திசையில் முன்னேறிச் செல்கின்றோம்' என அமெரிக்கர்கள் சப்பைக்கட்டு கட்டினர். அன்றிலிருந்து இன்றுவரை வடக்கையும் தெற்கையும் பிரிக்கும் எல்லைக்கோட்டிற்கு கீழே 40000 படைவீரர்களை அமெரிக்கா வைத்திருக்கின்றது. அமைதி ஒப்பந்தத்தில் கையொப்பமிட மறுத்து. வடகொரியாவை பல்வேறு வகைகளில் துன்புறுத்தி வருகின்றது.

தொடர்ச்சி 6ம் பக்கம்

# பல நாடுகள் மீது தாக்குதல் தொடுத்ததற்கும் மனித உரிமைகள் மீறல்களுக்கும் மக்களின் துயரங்களுக்கும் யார் காரணம்

5ம் பக்கத் தொடர்ச்சி

உயர்ந்த இடப்பகுதி எல்லைப்பாதுகாப்பு படைகளை (Terminal High Altitude Area Defence - THAD) அந்தத் தீபகற்பத்தில் நிறுவவேண்டும் என தென்கொரியாவை அமெரிக்கா நிர்ப்பந்தித்து வருகின்றது. தென்கொரியாவுடன் கூட்டுராணுவப் பயிற்சிகளை செய்துவருகின்றது. அதன் சமீபத்திய 2015ஆம் ஆண்டு பயிற்சிக்குப் பெயர் OPLAN 5015 ஆகும். இப்பயிற்சியில் வடகொரியாவின் ராணுவத் தளவாடங்கள்மீது 'முன்கூட்டியே தாக்கும்' திட்டமும் அதன் தலைநகர் பியாங் கியாங்கில் இருக்கும் தலைமையை அகற்றிடும் திட்டமும் அடங்கும். "வடகொரியாவின்மீது செலுத்தப்படும் வகையில் பல்வேறு வகையான தாக்குதல் திட்டங்களை யோசித்து முன்மொழியு மாறு" அமெரிக்க ராணுவத்திற்கு அதன் அதிபர் ஒபாமா உத்தரவிட்டிருக்கிறார். அதில், வடகொரி யாவின் ராணுவத் தளங்களையும், அதன் கம்ப்யூட்டர் நெட்ஒர்க் சர்வரையும் தகவல்தொடர்பு நெட்ஒர்க் கையும் உள்ளடக்கிய 'சைபர் ஸ்பேஸ்' மீதான ஒரு 'சோதனை முறை தாக்குதலும்' ஒன்றாகும். இவற்றையெல்லாம் தற்காப்பு பாதுகாப்பு நடவடிக்கைகள் என்று கூறமுடியாது. இவை, அப்பட்டமான நேரடித்தாக்குதலும் கோபமூட்டும் செயல்களுமாகும்.

ஒருபுறம் இத்தகைய அப்பட்டமான போர் தயாரிப்புகள். அதேசமயம் 2002இல் ஜார்ஜ் புஷ் 'தீமையின் அச்சாணி (axis of evil)' என தனது உரையில் சில நாடுகளை (வடகொரியா, ஈராக், ஈரான்) குறிப்பிட்டார். அமெரிக்காவின் இந்த நிலைப்பாடு மாறவேயில்லை. தன்னிச்சையாக எந்த நேரத்திலும் இந்த நாடுகளை முன்கூட்டியே தாக்கும் 'உரிமையை' அமெரிக்கா அறிவித்தது. எனவே, 2015இல் வடகொரியா அமெரிக்காவை முன்கூட்டி தாக்கும் தனது உரிமையை அறிவித்தது. உரிமை மட்டுமல்ல, யுத்தத்திலிருந்து தன்னைக் காத்துக்கொள்ள திறமையும் தனக்கிருக்கின்றது என வடகொரியா தற்போது இந்த சோதனைகள் மூலம் காட்டிவிட்டது. கொரிய மாணவன் ரி சோல் யுங் சொன்னதில் நியாயமிருக்கின்றதல்லவா? ஈராக்கும் லிபியாவும் தங்களிடம் பேரழிவு ஆயுதங்கள் இல்லை என அமெரிக்க ஏகாதி பத்தியக் கூட்டாளி நாடுகளிடம் நிரூபிக்க முயன்று இறுதியில் ஆதாரங்களையும் முன்வைத்தன. ஆனால் அதற்குள் இவர்கள் அந்நாடுகளில் ஊடுருவி ராணுவ மற்றும் வான் தாக்குதல்களைச் சரமாரியாக நடத்தி அழித்து அரசாங்கங்களையும் மாற்றிவிட்டனர் என்பதை உலகறியும்.

### மனித உரிமை மீறல்களும் மக்களின் துயரங்களும் குறித்த வடகொரியா மீதான குற்றச்சாட்டுகளும் உண்மைகளும்

தான் ஊடுருவி தாக்க நினைக்கும் நாடுகளில் மனித உரிமைகள் மீறப்படுகின்றன, மக்கள் அவதிப்படுகிறார்கள் என்ற வழக்கமான தனக்குப் பிடித்துப்போன பல்லவியை அமெரிக்க ஏகாதிபத்தியம் எப்போதுமே பாடும். ஈராக் அதிபர் சதாம் உசைன் விஷயத்திலும் லிபிய தலைவர் முஹம்மர் கடாஃபி விஷயத்திலும் ஏன், சிரியா அதிபர் பாஷார் அக் அசாத் விஷயத்திலும்கூட பல ஆண்டுகளாக இதே பல்லவியைப் பாடினார் கள். வடகொரியா குறித்து அமெரிக்கா செய்து வரும் பிரச்சாரத்திலும் இந்தப் பல்லவி தப்பாமல் இடம்பெற்றிருக்கிறது. வடகொரியாவில் மதச் சிறுபான்மையினரும் அரசியல் எதிர்ப்பாளர்களும் மிக அதிகமாக துன்புறுத்தப்படுகிறார்கள் என்றும் ஒரு நகரத்திற்கு நிகரான அளவில் 120 ஆயிரம் பேர் சிறை முகாம்களில் வசிக்கின்றனர் என்றும் ஐநா அறிக்கை கூறுகின்றது. 'பரந்துபட்ட திட்ட மிட்ட மிகமோசமான மனித உரிமை மீறல்கள்' அங்கு நடப்பதாக இந்த அறிக்கை கூறுகிறதென அமெரிக்கா மேலும் சுட்டிக்காட்டுகிறது. மனித உரிமை மீறல் உலகத்திலேயே வடகொரியாவில் தான் மிக மோசமாக இருக்கின்றதென்ற, 'சர்வதேச சமுதாயத்தின் ஒருமித்த கருத்தின்' வெளிப் பாடுதான் இந்த அறிக்கை என அமெரிக்கா கூறுகிறது. இயற்கையாகவே தென்கொரியா அரசாங்கமும் இந்த அறிக்கையை வரவேற்றிருக் கின்றது. வடகொரியா இதனை எதிர்த்திருக்கின்றது.

அமெரிக்காவின் நூறாயிரக்கணக்கான ராணுவ வீரர்கள் வடகொரியாவின் மீது படையெடுத்து போர்க் குற்றங்களை கொரிய மக்கள்மீது நடத்தியபோது என்ன மனித உரிமையை உயர்த்திப் பிடித்தார்கள்? ஏன், தனது சொந்த மண்ணிலேயே, உலகத்திலேயே மிகவும் அதிகமான வீதத்தில் 2 மில்லியன் மக்களை சிறையிலும் 5 மில்லியன் மக்களை பரோலிலும் வைத்திருக்கும் அமெரிக்கா என்ன மாதிரியான மனித உரிமையை உயர்த்திப் பிடிக்கின்றது? இதன் மீது ஐநா ஏதாவது அறிக்கை வெளியிட்டிருக்கிறதா?

வடகொரியாவை விமர்சிக்கும் தென்கொரியா வின் ராணுவ சர்வாதிகாரி பார்க் சுங் ஹீ 'தென்கொரியாவை 1961லிருந்து 1979 வரை இரும்புக்கரம் கொண்டு ஆட்சிசெய்தார்' என நியூயார்க் டைம்ஸ் கூறுகிறது. அவர் கொல்லப் படும் அளவிற்கு மக்களால் வெறுக்கப்பட்டார். இவரைத் தொடர்ந்த மற்றொரு ஜெனரல் சுன் தூ ஹுவான் ஆட்சியில் 1980இல் தென்கொரியா வில் தெற்கு நகரமான குவாஞ்சுவில் சுமார் 2000 பேர்கள், குறிப்பாக ஜனநாயகம் வேண்டிப் போராடிய மாணவர்கள் கொல்லப்பட்ட சம்பவம் நடைபெற்றது. இந்த ராணுவ ஒடுக்குமுறை சம்பவத்தில் அமெரிக்காவும் பங்குபெற்றிருந்ததை ஊடகங்கள் வெளிக்கொண்டுவந்தன. இது இயற்கைதான். ஏனெனில் கொரிய யுத்தம் துவங்கிய இரண்டாம் உலகப்போரின் இறுதிக்காலத்தி லிருந்து தென்கொரியாவின் ராணுவத்தின் மீது அமெரிக்காவின் முழு ஆதிக்கம் இருந்துவருகின்றது. முன்பு மட்டுமல்ல இன்றும்கூட ஐநாவின் விசாரணை தொடர்பான ஆதாரங்கள் தென் கொரியாவிலிருந்துப் பெறப்பட்டவையாகும். தென் கொரியாவில் யாராவது வடகொரியாவைப் பற்றி நல்லதாக எதையாவது சொல்லிவிட்டால் அது தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின்படி குற்றமாகும். இன்றும் வடகொரியாவிலிருந்து வரும் டுவிட்டர் செய்திக்கு பதில் கொடுக்கும் மக்கள் சிறையில் தள்ளப்படுகின்றனர் (நியுயார்க் டைம்ஸ், டிச 19, 2015). பொது இடத்தில் வடகொரியாவைப்பற்றி நல்லதாகப் பேசத் துணிந்ததால் ஷின் யுன் மின் என்ற கொரிய–அமெரிக்கப் பெண்மணி நாட்டை விட்டே வெளியேற்றப்பட்டார்.

வடகொரியாவில் மக்களில் சிலர் ஏதாவது துன்பங்களைச் சந்தித்துவிட்டால் அதற்கு அந்த சோசலிச அரசாங்கத்தைக் குற்றம்சாட்டி செய்தி வெளியிடுவதில் ஏகாதிபத்தியத்தின் கட்டுப்பாட்டில் இயங்கும் உலக ஊடகங்கள் சற்றும் தயங்கு வதில்லை. அந்த நாடு மக்களுக்கு கல்வி, (99% மக்கள் படித்தவர்கள் என சிஐஏ வேர்ல்டு ஃபேக்ட்புக் சான்றுபகர்கின்றது) மருத்துவ வசதி, குடியிருப்பு வசதி, அனைவருக்கும் வேலை என அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்து அதற்கு உத்தரவாதம் கொடுத்திருக்கிறதே, அதைப் பற்றி ஊடகங்கள் வாயைத்திறக்கின்றனவா?

### இயற்கைப் பேரழிவுகளையும் செயற்கை ஏகாதிபத்தியப் பொருளாதாரத் தடைகளையும் சோசலிச வடகொரியா தீரத்துடன் எதிர்த்து நிற்கின்றது

கொரியா இரண்டாகப் பிளவுபடுவதற்கு முன் மலைப்பாங்கான வடபகுதி மக்களுக்கு உணவு தென்பகுதியிலிருந்து கொண்டுவரப்பட்டது. ஆனால் இந்த இரண்டு பகுதிகளுக்கும் இடையே அமெரிக்கா கூர்மையான கத்திக் கம்பிகளைக் கொண்ட வேலியை அமைத்தும் கண்ணிவெடி களையும் பதித்தும் அப்பகுதியை மயான மண்டல மாக்கியது. வடகொரியவின் மீது அமெரிக்கா ஏராளமான தடைகளைவிதித்தது. ஐநா சபையிலும் பல்வேறு தடை உத்தரவுகளை பாதுகாப்பு கவுன்சில் மூலம் நிறைவேற்றி அவற்றை பிற நாடுகளும் வடகொரியாமீது போடவேண்டும் என்று நிர்ப்பந்தித்தது. சமீபத்தில் ஏப்ரல் 2011இல் கூட அமெரிக்க அதிபர் ஒபாமா ஒரு நிர்வாக ஆணைக்கு அனுமதி அளித்தார். அதன்படி, வடகொரியா விலிருந்து எந்தப் பொருளையோ, சேவையையோ, தொழில்நுட்பத்தையோ நேரடியாகவோ மறைமுக மாகவோ அமெரிக்காவில் இறக்குமதி செய்யக் கூடாது என தடை போடப்பட்டிருக்கின்றது.

ஆயினும் சில தகவல்களை நம் வாசகர்களுக்கு நாம் சொல்லியாக வேண்டும். மொத்த உள்நாட்டு உற்பத்தி குறியீடான GDP யின் படி மட்டும் வைத்துப்பார்த்து வடகொரியா மிகவும் ஏழை நாடுகளில் ஒன்றாகவும் மிகவும் வளர்ச்சி குன்றிய நாடுகளில் ஒன்றாகவும் காட்டப்படுகின்றது. 1970யின் மத்திவரை அதன் தனிநபர் வருமானக் குறியீடு (GDP) தென்கொரியாவைப் போலவே இருந்தது. வடகொரியாவின்மீது அமெரிக்கா தொடுத்த போருக்குப் பிந்தைய மூன்றாண்டு களிலேயே, 1954–1956 காலத்திய மூன்றாண்டுத் திட்டத்தின் படி, வடகொரியாவின் தொழில் வளர்ச்சி 30% என அதன் எதிரி நாடான அமெரிக்காவின் ஆதாரத்தின் அடிப்படையில் ஒப்புக்கொள்ளப்பட்டது. இந்த மூன்று ஆண்டுகளில் மட்டுமே தனது மொத்த உள்நாட்டு உற்பத்தியை வடகொரியா மும்மடங்காக்கிவிட்டது. மாபெரும் இரும்பு உருக்கு ஆலைகள் அங்கு நிறுவப்பட்டன. மின்னுற்பத்தி நிலையங்கள் அமைக்கப்பட்டன. உலக பொருளாதார நிபுணர்கள் மூக்கில் விரலை வைக்கும் அளவிற்கு அந்நாட்டில் தொழில் வளர்ச்சி வேகம் காணப்பட்டது. 1958லேயே அனைத்துத் துறைகளிலும் சமூகமயப்படுத்துதல் கிட்டத்தட்ட முடிந்துவிட்டது. 1960 வரை தென் கொரியாவைவிட வடகொரியாவில் பொருளாதார வளர்ச்சி படுவேகமாக நடந்தது. ஆனால், அமெரிக்கா மற்றும் தென்கொரிய ராணுவ ஆட்சியாளர்களின் கடும் பகைமையும், சோவியத் ரஷ்யா மற்றும் சீனாவிற்கு இடையே பிளவு அதிகரித்ததும் இதனால் உலக கம்யூனிச இயக்கத்தில் குழப்பங்கள் ஏற்பட்டதும் ஆகிய இவை அனைத்தும் வடகொரிய மீது தாக்கத்தை ஏற்படுத்தியதில் வியப்பில்லை. இறுதியாக, சோவியத் ரஷ்யாவிலும் சீன மக்கள் குடியரசிலும் எதிர்ப்புரட்சி நடந்துவிட்டதால் வடகொரியாவிற்கு கிடைத்துவந்த பொருளாதார உதவிகள் வெகுவாகக் குறைந்துவிட்டன. இந்நாட்டின் ஆலை உற்பத்தி 1990களில் குறையத்துவங்கியது. உரம் பூச்சிமருந்து மின் உற்பத்தி நீர்ப்பாசனம் ஆகிய தொழில்களிலும் மந்த நிலை ஏற்பட்டு விவசாய உற்பத்தியும் பாதிக்கப்பட்டது. வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவதுபோல தொடர்ந்து பல்வேறு இயற்கைப் பேரழிவுகள் –மூன்றுமுறை பெரும் வெள்ளமும் கடும் வறட்சியும் 1994–96 ஆண்டுகளில் மாறி மாறி தாக்கியதால் விவசாயத் துறை கிட்டத்தட்ட நொறுங்கிவிட்டது.

இந்த பாதிப்புகளை ஏகாதிபத்திய ஊடகங்கள் பெரிதுபடுத்திக் காட்டின. ஆனால் இதன் அடுத்த பாகத்தைப் பற்றி பேசவில்லை. அதாவது வடகொரியாவின் திட்டமிட்ட பொருளாதாரம் அந்நாட்டை இந்த பாதிப்புகளிலிருந்து மீட்டு வருகின்றது என்ற மறுக்க முடியாத உண்மையை ஊடகங்கள் மறைத்து விடுகின்றன. 1998 முதல் விவசாயத்தில் குறிப்பிடத்தக்க படிப்படியான வளர்ச்சி ஏற்பட்டு 2013ல் உணவுப் பொருட்களில் அந்நாடு கிட்டத்தட்ட தன்னிறைவு அடைந்து விட்டது. 2014இல் அறுவடை மிகப் பிரம்மாதமாக நடைபெற்றிருக்கின்றது. மக்கள் அனைவருக்கும்

தொடர்ச்சி 7ம் பக்கம்

# ஏகாதிபத்திய மிரட்டல்களையும் இயற்கை பேரழிவுகளையும் சர்வதேச கம்யூனிச இயக்கப் பின்னடைவையும் சோசலிச வடகொரியா தாங்கிக் கொண்டு துணிந்து நிற்கின்றது

*6ம் பக்கத் தொடர்ச்சி*

*உணவை உத்திரவாதப்படுத்தும் அளவிற்கு உற்பத்தி இருந்தது. இதுபோக, அனைத்துத் துறைகளிலும் நவீனமயத்தையும் 'அறிவியல்படுத்து தலையும்' அதாவது மிகச் சமீபத்திய உற்பத்தி மற்றும் நிர்வாக தொழில்நுட்பங்கள் அனைத்தையும் உள்வாங்கி வடகொரியா நடைமுறைப்படுத்தத் துவங்கியது. உற்பத்தியில் இயந்திரமயத்தையும் தானியங்கி செய்முறையையும் (ஆட்டோமேஷன்) புகுத்தியது. 1998 முதல் 2013 வரை அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு அரசாங்கம் திட்ட மிட்டது. இதன்படி ஐடி மற்றும் எலெக்ட்ரானிக் தொழில்துறைக்கு முன்னுரிமை அளித்தது.*

*ஆக, இந்தக் குறுகிய காலக்கட்டத்தில் அவர்கள் எதைச் சாதித்தார்கள்? வெற்றிகரமான ஹைட்ரஜன் குண்டு சோதனை என்பது வடகொரியாவைப் பொறுத்தமட்டில் பெரியதொரு படியாகும். அணுப்பிளவு* (Fission) *தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி உருவாக்கப்படும் அணுகுண்டை விட அணுச்சேர்க்கையை* (Fusion) *பிரதானமான கோட்பாடாகக் கொண்ட தொழில் நுட்பத்தால் உருவாக்கப்படும் ஹைட்ரஜன் குண்டுகள் நூறு மடங்கு சக்தி வாய்ந்ததாக இருக்கும்.*

*ஆனால் வடகொரியாவின் இந்த வளர்ச்சியுடன் சேர்ந்த வேறு சில அம்சங்களையும் நாம் பார்க்கத் தவறக்கூடாது. வடகொரியா தனது அணு திட்டத்தை 1990களிலேயே நிறுத்த ஒப்புக்கொண்டது. அதற்கு தன்மீது திணிக்கப்பட்டிருக்கும் பொருளாதாரத் தடைகள் நீக்கப்பட வேண்டும், அமைதிக்கான ஒப்பந்தம் கையெழுத்திடப்பட வேண்டும் என்ற உத்தரவாதத்தை கோரியது. 1994ல் அமெரிக்காவுடன் 'அணுசக்தி அகற்றல்' ஒப்பந்தத்தை வடகொரியா செய்துகொண்டது. பிறகு, தென்கொரியாவுடனான உறவு மேம்பட்டதால் பல ஆண்டு களுக்கு தனது அணு திட்டத்தை வடகொரியா நிறுத்திக் கொண்டது. ஆனால் அமெரிக்காவும் தென்கொரியாவும் தங்களின் பகைமையை மீண்டும் காட்டத்துவங்கியவுடன் வடகொரியாவும் தனது முயற்சியை மிகத் துல்லியமாகத் திட்டமிட்டு, விரைவாக எடுத்து சென்றது.*

*அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஜிம்மி கார்ட்டர் வேறு வழியின்றி பின்வருமாறு எழுத வேண்டியதாயிற்று: "அமெரிக்காவுடன் நடைபெற்ற எல்லா நேரடிப் பேச்சுவார்த்தைகளிலும் ஒரே செய்தியை பியோங்யங் (வடகொரியா) சொல்லி யிருக்கின்றது. தனது அணு திட்டத்தை நிறுத்திக் கொண்டு அதனை சர்வதேச அணு சக்தி ஏஜென்சி* (IAEA - International Atomic Energy Agency)*யின் சோதனைக்கு உட்படுத்த ஒரு ஒப்பந்தத்திற்கு தான் தயார் என்றும் 1953ல் செய்யப்பட்ட 'தற்காலிக' போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கு பதிலாக நிரந்தர அமைதி ஒப்பந்தத்தைச் செய்து கொள்ளவும் தயார் என்றும் அச்செய்தி பொருள்படுத்துகின்றது. வடகொரியாவின் இந்த முன்மொழிவை கருத்தில் எடுத்துக்கொண்டு நாம் பதிலளிக்கவேண்டும். இதற்கு துரதிருஷ்டவசமான மற்றொரு மாற்று, அமெரிக்காவின் ஆதரவுடன் செய்யப்படும் ராணுவத்தாக்குதலுக்கும் அந்நாட்டில் ஆட்சி மாற்றத்தை கொண்டுவர செய்யப்படும் முயற்சிக்கும் அஞ்சுவதாகச் சொல்லி வடகொரியா தங்களைப் பாதுகாத்துக் கொள்ள என்னென்ன தேவையென நினைக்கின்றதோ அவற்றைச் செய்துகொள்வதாகும்". ஆக, இதுதான் வடகொரியா வின் அணு சோதனைகளுக்குப் பின்னால் இருக்கும் யதார்த்தச் சூழ்நிலையாகும். இந்த செயல்களின் சமீபத்திய ஒன்றுதான், விண்ணில் செயற்கைக்கோளைப் பாய்சிய வடகொரியாவின் சாதனையாகும்.*

### வட கொரியா நாடு உலக மக்களின் ஆதரவிற்காக காத்திருக்கின்றது

*சுமார் 60 ஆண்டுகால ஏகாதிபத்திய பகையை சந்தித்துக் கொண்டிருக்கும் சூழலில் வடகொரியா இந்தச் சாதனைகளை செய்திருக்கின்றது. அதுவும், தொழிலாளர்களும் ஒடுக்கப்பட்ட மக்களும் உருவாக்கிய பல்வேறு பலன்களை பின்னுக்குத் தள்ளுவதில் ஏகாதிபத்தியம் வெற்றியடைந்துவிட்ட இன்றைய உலக சரித்திரத்தில் இது நடந்திருக் கின்றது. பல்வேறு தடைகளையும் மிரட்டல்களை யும் எதிர்க்கொண்ட போதிலும், உலக நாடுகள் பலவற்றிலிருந்து துண்டிக்கப்பட்டுவிட்ட போதிலும் அதன் பொருளாதாரத்தை முடக்கும் சதிகளைச் சந்தித்தபோதிலும் இந்த சின்னஞ்சிறிய நாடான வடகொரியா இவ்வளவு முன்னேற்றத்தை அடைந் திருக்கிறதென்றால் அது அம்மக்களின் அறிவின், ஆக்கப்பூர்வ சக்தியின் ஒற்றுமையின் அடையாள மாகும். மேலும் அந்நாட்டின் சோசலிச சமூகப் பொருளாதர அரசியல் அமைப்பின் திறனின் வலிமையின் வெளிப்பாடாகும். அவர்கள் நேர்மை யாகச் சிந்திக்கக்கூடிய சுதந்திரத்தை நேசிக்கக் கூடிய உலக மக்களிடையே அனேகமாக எதிர்ப் பார்ப்பதெல்லாம், இதுதான்; ஏகாதிபத்தியவாதி களின் குறிப்பாக அவர்களின் தலைவனான பொய்யும் புரட்டும் பேசிக்கொண்டிருக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பிரச்சாரத்திற்கு ஆளாகிவிடாமல் பகுத்தறிவுடன் கூடிய, உண்மையைத் தேடவேண்டும் என்ற எண்ணமுள்ள ஆதரவைத்தானாகும்.*

# வரைவு தேசிய கல்விக்கொள்கை 2016 . . .

*4ம் பக்கத் தொடர்ச்சி*

*மதச்சார்பற்ற விஞ்ஞானபூர்வ நவீன கல்வி என்ற கோட்பாட்டையே இருட்டடிப்பு செய்வது நாட்டின் சமூக–கலாச்சார சூழ்நிலைமையில் மிக பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்தும். இது குருட்டுத்தனமான கீழ்படிதல், வெறிவாதம், அறிவு விருத்திக்கு–எதிர்ப்புவாதம் அதோடு அனைத்து விதமான சகிப்புத்தன்மையற்ற பகுத்தறிவுவின்மை கள் முன்னிறுத்தப்படும். மதச்சார்பற்ற விஞ்ஞான பூர்வ கல்வியை அழிப்பதென்றால் பகுத்தறிவை அழிப்பதென்று அர்த்தம், வாழ்க்கைப் பிரச்சினை களை யதார்த்தமாக பகுத்தாய்வு செய்யும் சக்தியை அழிப்பதென்று அர்த்தம். மனிதகுலத்தின் சிந்திக்கும் திறனை இப்படி அழிப்பதோடு கூடவே மக்களின் கலாச்சார–ஒழுக்கநெறி முதுகெலும்பும் நொறுக்கப்படும். இத்தகைய மனவோட்டம் நாட்டில் பாசிசத்தை உருவாக்குவதற்கு உதவிடும்.*

*எனவே பாடத்திட்டம், பாடப்புத்தகங்களில் உள்ள பாடங்கள், நடத்தைநெறி பாடங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களின் நடைமுறைகள் மற்றும் சம்பிரதாயங்கள் என கல்வியின் அனைத்து அம்சங்களிலும் மதச்சார்பற்ற–விஞ்ஞானபூர்வ–ஜனநாயகபூர்வ அணுகுமுறையை பயனுள்ள வகையில் பராமரித்து அதை மேலும் வலுப்படுத்து மாறு மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தை, பாஜக அரசாங்கத்தை மக்கள் வலியுறுத்த வேண்டும். மதரீதியான எந்த ஒரு அணுகுமுறையையும் நிறுத்த வேண்டும். திரிக்கப்பட்ட வரலாறுகளைக் கூறுவதை, வழக்கற்றுப்போன, விஞ்ஞானத்திற்குப் புறம்பான சிந்தனைகளையும் போதிப்பதை தடுத்து நிறுத்து வதற்கானதாக கல்விக் கொள்கை அமைய வேண்டும். அது அடிப்படை அறிவியல்கள், மனிதயியல் மற்றும் இலக்கியம் ஆகியவற்றிற்கு உரிய முக்கியத்துவம் அளிக்க வேண்டும். கற்பித்தல் மற்றும் கற்றலில் பள்ளிக்கல்வியின் அடித்தளத்தையே சிறுமைப்படுத்தும் நோக்குடைய மேலோட்டமான 'செயல்பாட்டு அணுகுமுறை' அல்லது 'குழந்தை மைய அணுகுமுறை' அதாவது ஆரம்பத்திலிருந்தே ஆசிரியரது பங்கு மறுக்கப் பட்டு குழந்தைகள் தானாகவே கற்றுக்கொள்ளும் முறை போன்ற நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும். அப்போதுமட்டும்தான் இந்த தேசத்தைக் கட்டியெழுப்பியவர்கள் விரும்பிய சுதந்திரமான, முழுமையான, மனிதனை மனிதனாக்கும் மற்றும் குணாம்சத்தைக் கட்டியெழுப்பும் கல்வி வசப்படும். இல்லையெனில் இந்த வரைவு ஆவணம் மதச்சார் பற்ற விஞ்ஞானபூர்வ நவீன கல்வியை நாட்டில் அழித்தொழிப்பதற்கான மைல்கல் ஆவணமாக இருந்துவிடும்.*

*கொள்கையை இறுதிசெய்வதற்கு முன்பாக மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் இந்த உண்மைகளை எல்லாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். தேவையான மாற்றங்களை, திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். வரைவு தேசிய கல்விக் கொள்கை 2016 ஆவணம் கொண்டுள்ள கெட்ட சகுனங்கள் குறித்து இந்திய மக்கள் தொடர்ந்து விழிப்போடு இருக்க வேண்டும், இந்த பேரழிவு கொள்கையை அமல்படுத்துவதை முறியடிக்கும்படியான வலுவான தொடர்ச்சியான கல்வி இயக்கத்தை கட்டியெழுப்புவதற்கு தங்களை அணிதிரட்டிக்கொள்ள வேண்டும்.*

**2** வது அகில இந்திய

**இளைஞர் மாநாடு**

**அக்டோபர் 22–24, 2016**

**பாட்னா, பீஹார்**

**பேரணி–பொதுக்கூட்டம்**

**துவக்கவுரை**

**தோழர் சத்தியவான்**

*மத்தியக் கமிட்டி உறுப்பினர், எஸ்யுசிஐ (சி)*

***சிறப்புரை : தோழர்***

**பிரவாஸ் கோஷ்**

*பொதுச் செயலாளர், எஸ்யுசிஐ (சி)*

**AIDYO**

**அகில இந்திய**

**ஜனநாயக இளைஞர் சங்கம்**

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication : 2nd week of Every Month

பாட்டாளி சிந்தனை

Post.Reg.No:TN/CCN/429/2015-17
WPP Licence No: TN/PMG(CCR)/WPP-373/2015-17
Registered with the Registrar of Newspapers for India No : 62018/88

# ஆகஸ்ட் 5 : பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர் சிப்தாஸ் கோஷ் 40வது நினைவுதினம்




*மதுரையில் ஆகஸ்ட் 13, 2016 அன்று நடைபெற்ற மாநில அளவிலான தோழர் சிப்தாஸ் கோஷ் 40வது நினைவுதினக் கூட்டத்தில் தோழர் சி கே லூகோஸ், மத்திய கமிட்டி உறுப்பினர், எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) உரையாற்றுகிறார். கூட்டத்தில் கலந்துக் கொண்டோர்.*



**ஆகஸ்ட் 5 : பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர் சிப்தாஸ் கோஷ் அவர்களின் 40வது நினைவுதினக் கூட்டத்தில் தோழர் பிரவாஸ் கோஷ், பொதுச் செயலாளர், எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கொல்கத்தாவில் உரையாற்றுகிறார்**

## காஷ்மீர் பள்ளத்தாக்கில் உடனடியாக அமைதியை ஏற்படுத்து

*காஷ்மீர் பள்ளத்தாக்கில் நிலவும் வருத்தத்திற்குரிய நிகழ்வுகளின்மீது தனது ஆழ்ந்த கவலையையும் வேதனையையும் வெளிப்படுத்தி எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் 13 ஜூலை, 2016 அன்று வெளியிட்ட அறிக்கை:*

காஷ்மீர் பள்ளத்தாக்கில் தொடர்ந்த சீரழிவு நிலைமை அதன் உச்சத்தை அடைந்திருக்கிறது. பத்திரிகை செய்திகளின்படி 30 பேர் ஏற்கெனவே இறந்துவிட்டனர். கல்வி நிலையங்கள், கடைகள், சந்தைகள், அலுவலகங்கள், நிறுவனங்கள் ஆகியன நீண்டகாலமாக மூடியிருப்பதானது சகஜ வாழ்வை ஸ்தம்பிக்கச் செய்துள்ளது. பள்ளத்தாக்கு முழுவதும் பரவியிருக்கும் பாதுகாப்பற்ற, நிச்சயமற்ற சூழ்நிலையானது வாழ்வை தாங்கமுடியாததாகவும் மிகுந்த அழுத்தத்திற்குரியதாகவும் ஆக்குகிறது.

அப்பள்ளத்தாக்கில் இப்படிப்பட்டதொரு சூழ்நிலைமை இது முதல் முறையல்ல. அங்கு சாதாரண நிலைமையையும் அமைதியையும் மீட்டெடுக்கத் தேவையான உரிய நடவடிக்கைகளை உடனடியான எடுக்க சூழ்நிலையின் அழுத்தம் வேண்டுகிறது. ஆயுத பிரயோகத்தாலன்றி, சம்மந்தப்பட்ட அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கிய அமைதிப் பேச்சுவார்த்தைமூலமே அங்கு அமைதி நிலைநாட்டப்படமுடியுமென நாங்கள் நம்புகிறோம்.

அனைவரையும் உள்ளடக்கிய அமைதிப் பேச்சுவார்த்தைக்கான உரிய நடவடிக்கைகளை உடனடியாக எடுக்குமாறு நாங்கள் மத்திய அரசாங்கத்தை வலியுறுத்துகிறோம்.

## செப்டம்பர் 27, 2016

## பாராளுமன்றத்தை நோக்கி மாணவர் பேரணி

## செப்டம்பர் 28, 2016

## அகில இந்திய கல்வி மாநாடு

### புதுதில்லி




*சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்), தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு–வெளியிடுபவர்: வி பி நந்தகுமார் அலுவலகம் : பு எண் 16 (ப எண் 18), இராட்லர் தெரு, சூளை, சென்னை 600 112 அச்சகம் : ஸ்ரீ அய்யனார் பிரிண்டர்ஸ், எண் 10, சுப்பாராவ் நகர், 2வது தெரு, சூளைமேடு, சென்னை 600 094, ஆசிரியர்: வி பி நந்தகுமார்*

Published by: V P Nandakumar on behalf of Socialist Unity Centre of India (Communist), Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai,Chennai 600 112 and Printed at Sri Aiyanar Printers, No.10, Subha Rao Nagar, 2nd Street, Choolaimedu, Chennai 600 094. Editor : V P Nandakumar
Tel : 044 - 2643 3169, 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : **www.sucicommunist.org**